விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 13 திங்கட்கிழமை (26.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 098

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து!

## ஐ.நாவின் உறுப்பினர்கள் இலங்கை வர அரசு தடை!

### நவநீதம்பிள்ளைக்கு மட்டும் அனுமதி



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவ நீதம்பிள்ளை மட்டும் இலங்கைக்கு விஜ யம் செய்ய முடியும் என நேற்று அரசாங்கம் அறிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் தீர்மானத்தை விரும்பாவிட்டால் அங்கத்துவத்திலிருந்து விலகிவிடுங்கள்

### ஐ.தே.க.பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நாவின் தீர்மானத்திற்கு இலங் கை கட்டுப்பட விரும்பாவிட்டால் ஐ.நாவின் அங்கத்துவத்திலிருந்து இலங்கை விலக வேண்டும் என ஐ.தே.க.பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பல தசாப்தங்களாக ஐ.நாவின் அங்கத்துவமுடைய ஒரு நாடென்ற வகையில், ஐ.நாவின் மனித உரி மைகள் சாசனத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் ஐ.நா. கூறுவதை கேட்க அரசாங்கம் தயாரில்லை என்றால் ஐ.நாவில் தொடர்ந்தும் இருப்பதில் அர்த்தமில்லை எனக் கூறிய அவர்,

இத்தகைய பிரச்சினையை தெளி வான இராஜதந்திர அணுகுமுறை மூலமே தீர்க்க முடியும். அரசாங்கம் வீதிகளில் ஊர்வலம் நடத்தாமல் அதன் இராஜதந்திர அணுகு முறை களில் நேர்மையாக இருக்க வேண் டும் எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

மேலும் அரசாங்கம் அடக்குமுறை யான அணுகுமுறையை தொடர்ந் தால் இந்நாட்டின் மக்கள் அதற்கு பெரும் விலையை செலுத்த நேரிடும்.

சர்வதேச சமூகம் எம்மை பணிய வைக்க முற்பட்டால் இந்த நாட்டின் மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள். எனவே நாம் மிகவும் இராஜதந்திர அணுகுமுறையை இவ்விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-8,11)

## ஜெனிவாத் தீர்மானத்திற்கு பதிலடி அமெ.அதிகாரியின் உரைக்கு தடை!

(கொழும்பு)

தென்னாசியாவுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மைக்கல் ஜே டிலானி கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் ஆற்றவிருந்த உரையை எந்தக் காரணமும் கூறாமல் இலங்கை அரசாங்கம் திடீரென நிறுத்தியுள்ளது.

தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதில் பொருளாதார அபிவிருத்தியின் பங்கு என்ற கருப்பொருளில் எதிர்வாரும் 27ஆம் திகதி கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத் தில் இவர் முக்கிய உரையொன்றை நிகழ்த்த விருந்தார்.

இவர் உரையாற்றுவதற்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அனுமதி வழங்கி யிருந்த போதிலும், திடீரென இவரின் உரை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தைத் தெரி விக்க கொழும்பு லக்ஸ்மன் க்திர்காமர் நிலை யம் மறுத்துள்ளது.

ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரான சஜின்வாஸ் குணவர்த்தனவே இவரது உரையை திடீரென நிறுத்துமாறு உத் தரவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மைக்கல் டிலானி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவாத் தீர்மானத்தை ஆராய ஸ்ரீ.சு.கட்சியின் மத்தியகுழு இன்று கூடும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொட ரில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பாக ஆராய்வதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிர தான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் மத்திய குழு இன்று திங்கட்கிழமை அவ சரமாகக் கூடவிருக்கின்றது.

ஜெனிவா தீர்மானம் தொடர்பாக எத்தகைய அணுகுமுறைகளைக் கையாள்வது என்பது தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதால் இந்தக் கூட்டம் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாக அமையும் எனக் கருதப் படுகின்றது. இக் கூட்டத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தி னால் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆரா யப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா தீமானத்தை நடைமுறைப் படுத்துவதா, (20ஆம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் 1600 தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைக்கப்படுவர்

### இராணுவமும் குறைக்கப்படுமாம்-கோத்தபாய

(டோக்கியோ).

வடக்கு கிழக்கில் பணியாற்று வதற்காக சுமார் 1600 தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தற்போது டோக்கியோவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ள பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

1600 தமிழர்களை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள் வதற்கான முன்முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி யுடனான சந்திப்பின் போதே கோத் தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைப் பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷதெரிவித்ததாகவும்டோக்கியோ விலுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் நடந்த போர்க் குற்றம் செனட் சபையில் அடுத்த வாரம் அறிக்கை

(வாஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற இறு திக்கட்டப் போரின் போது மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமைமீறல்கள் தொடர்பிலான தனது விசாரணை அறிக்கையை அடுத்தவாரம் அமெரிக்க ஜனாதி பதியின் போர்க்குற்ற விவகாரங் களுக்கான தூதுவராகப் பணியாற் றும் ஸ்டிபன் ரப், செனட் சபைக்கு சமர்ப்பிக்கவுள்ளார்.

இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று, இலங்கை தொடர்பில்அமெரிக்கசெனட்சபைக்கு இவர் சமர்ப்பிக்கும்மூன்றாவது அறிக் கை இதுவெனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறு திக்கட்டப் போரின் போது மேற்கொள் ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து நேரில் விசாரணைகளை மேற்கொள் வதற்காக ஸ்டிபன் ரப் கடந்த பெப்ர வரி மாத ஆரம்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

இவ்விஜத்தின் போது அரசாங் கத் தரப்பு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மற்றும் வெகுஜன அமைப் புக்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தலையிடும் தேவை இந்தியாவுக்கு இல்லை

### பிரதமர் மன்மோகன் சிங் தெரிவிப்பு

(புதுடில்லி)


இலங்கையின் இறைமையில் தலையிடு வதற்கான தேவைப்பாடு இந்தியாவிற்கு இல்லை என தெரிவித்த பிரதமர் மன்மோகன் சிங், தமக்கு தேவையாக இருப்பது இலங்கையில் தமிழ் மக்களுக்கு சமனான உரிமைகளை பெற்றுக்கொடுப்பதே.

"இலங்கைக்கு எதிராக எந்தவொரு நட வடிக்கையையும் இந்தியா மேற்கொள்ள வில்லை எனக் கூறினார்.

புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே பிரதமர் மன்மோகன் சிங் இந்த கருத்துக்களை வெளியிட்டிருந் தார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு தெரிவித் தமை தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

அமெரிக்க (20ஆம் பக்கம் பார்க்க)



## சீன இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம்

(பீஜிங்)

சீனாவின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது.

இலங்கை-சீன கலாசாரப் பேரவையின் அழைப்பின் பேரில் குறித்த பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள தாக தெரியவருகின்றது.

சீனாவின் ஹுனான் பிராந்தியத்தின் ஷம்யாங்கி நகரின் நகரபிதா செங்யசூயூ உள்ளிட்ட பத்து பேர் இந்தக் குழுவில் அங் கம் வகிக்கின்றனர்.

இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் பௌத்த மத (20ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# ஐ.நா.கூட்டத்தில் பங்கேற்க வேண்டாமென உறுப்புரிமை நாடுகளே எமக்குக் கூறின!

## சென்னையில் சுமந்திரன் எம்.பி. உரை



(சென்னை)

ஐக்கிய நாடுகள் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்னணியில் கூட்டமைப்பு செயற்பட்டதாகவும் அது தொடர்பில் தற்பொழுது வெளிப்படையாக பேச ஆரம்பித்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

சென்னையில் லயோலா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநில மாநாடு இடம்பெற்று வருகின்றது. அந்த மாநாட்டில் சட்டமின்மையும் அரசின் தப்பிக்கும் போக்கும் மிதிபடும் ஜனநாயகமும் மனித உரிமைகள் என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் லயோலா கல்லூரியில் மாலை இடம்பெற்றது.

இப்பொதுக்கூட்டத்தில் இலங்கையில் ஜனநாயகத்தை மீட்டெடுத்தல் என்ற தலைப்பில் சுமந்திரன் எம்.பி பேசினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவுக்குச் செல்லவில்லை என்று நாட்டில் உள்ள எங்கள் மக்கள் ஆதங்கத்துடன் பேசினார்கள். உள்ளூர் அரசியலையும் உலக அரசியலையும் மக்கள் அறியாமையினாலேயே இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில சிக்கல்களை எதிர்கொண்டது.

ஜெனிவாவில் நடந்த மனித உரிமை மாநாட்டுக்கு செல்லக்கூடாது என்று எமக்கு ஆலோசனை தெரிவித்ததே உறுப்புரிமை நாடுகள்தான் இந்த விவகாரத்தை முன்னர் பகிரங்கமாக சொல்ல முடியாத நிலைமை காணப்பட்டது. தற்பொழுது அதை வெளிப்படையாக சொல்லக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த மாநாட்டில் கலந்து கொள்வது தீர்மானத்தை பாதிக்கும் என்று உறுப்பு நாடுகள் சொல்லியிருந்தன.

நான் கடந்த மூன்று மாதங்களாக நாட்டில் இல்லாமல் வெளிநாடுகளில் தங்கியிருந்து இதற்காக வேலை செய்ததுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பல பேச்சுவார்த்தைகளை நடத்தினேன். மீறப்பட்ட வாக்குறுதிகள் என்ற தலைப்பில் உறுப்பு நாடுகளுக்கு பல பக்க கடிதம் ஒன்றையும் கூட்டமைப்பு எழுதியது.

போர்க் குற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் நிலையில் அது தொடர்பான விடயங்களை ஐ.நா. தீர்மானம் உள்ளடக்கியுள்ளது,

இந்த தீர்மானத்தை ஆதரித்து இந்தியா வாக்களித்தமை இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு புத்துயிர் அளிப்பதாகவும் அதற்கு அழுத்தங்களைக் கொடுத்த தமிழ்நாட்டு மக்களுக்கு இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதாகவும் சுமந்திரன் தெரிவித்தார். (ந-8,11)

## ஐரோப்பிய தூதரகங்கள் மூடப்படாது-அரசு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் இயங்கி வரும் இலங்கைத் தூதரகங்கள் மூடப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகளில் இயங்கி வரும் தூதரங்கள் மூடப்பட உள்ளதாகவும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் தூதரங்கள் அமைக்கப்பட உள்ளதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் கருத்தில் எவ்வித உண்மையும கிடையாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. மேலும் வெளிவிவகார சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் சில தூதரங்கள் இணைக்கப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இலங்கையுடன் நட்புறவாக செயற்படும் நாடுகளில் தூதரங்கள், உயர் ஸ்தானிகராலயங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும் இந்த நடவடிக்கையை தூதரகங்களை மூடும் நிகழ்வாக கருத முடியாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ந-8;11)

## வடமராட்சி மீனவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

### இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையைக் கண்டித்து வடமராட்சி மீனவர்களும், வடமராட்சியில் உள்ள மயிலிட்டி மீனவர்களும் இணைந்து தொழில் புறக்கணிப்பு மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த உள்ளனர்.


இன்று திங்கட்கிழமை அப்பகுதி மீனவர்கள் ஒன்றிணைந்து கடற்றொழிலை புறக்கணிக்கப் போவதாகவும் நாளை செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

முனை தேவாலயத்திலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணியும், சுப்பர்மடம் மீனவர் சங்கத்திலிருந்து மற்றொரு ஆர்ப்பாட்டப் பேரணியும் பருத்தித்துறை பிரதேச செயலகம் நோக்கி புறப்படவுள்ளது.

இவ்விரு ஆர்ப்பாட்டப் • பேரணிகளும் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் சந்தித்து பருத்தித்துறை பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளன. (ந-8;10)

# அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் தீர்மானத்தை அமுலாக்க முடியாது!

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச செவ்வி



ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவை எனக் கூறப்பட்டிருக்கின்றது. எனவே இத் தீர்மானத்தினால் அரசாங்கத்துக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர எதிர்ப்பாக ஒன்றும் நடக்கப் போவதில்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

சர்வாதிகார ஆட்சியை நடத்தும் ஒருவரை எந்த ஒரு சர்வாதிகார நாட்டு அரசாங்கத்தினாலும் அசைக்க முடியாது என்ற நிலை ஜெனிவாக் கூட்டத் தொடரின் மூலமாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது எனவும் கொழும்பு வாரப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளும், ஏனைய அதிகார நாடுகளும் ஆதரவு தெரிவித்து அமெரிக்காவை வெற்றியடையச் செய்துள்ளன.

ஆனால், இந்தத் தீர்மானம் இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மக்களையும் சர்வதேச உறவுகளையும் ஆராய்ந்து சமர்ப்பிக்கப்பட்ட ஒரு தீர்மானமல்ல.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை நடைமுறைபடுத்தக் கோரும் அமெரிக்காவின் தீர்மானத்தை எந்த வகையிலும் நாம் ஏற்கப்போவதில்லை. அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு சார்பாக வாக்களித்து அதனை வெற்றிபெறச் செய்த நாடுகள் அனைத்தும் அமெரிக்காவின் அதிகாரத்தின் கீழ் தங்கி வாழும் நாடுகள் என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

பனிப்போர்க் காலத்தில் ரஷ்யாவுடன் கைகோர்த்து அமெரிக்காவுக்கு எதிராக செயற்பட்ட ஒரு நாடான இந்தியா, இன்று அமெரிக்காவுடன் இணைந்து இலங்கைக்கு எதிராக வாக்களித்திருக்கின்றது. தமிழ்நாட்டு அரசியல் களத்தில் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்காவிட்டால், அமெரிக்காவுக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருக்காது.

இலங்கையை தனது அதிகாரத்தின் மூலமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நினைக்கும் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற வல்லரசு நாடுகள் என்பதனையும், வல்லரசு நாடுகள் ஏனைய நாடுகள் மீது கொண்டுள்ள பொருளாதார, அரசியல் தாக்கத்தையும் இன்னும் சில நாட்களில் இங்குள்ள அரசியல் தலைமைகள் உணரும்.

சர்வாதிகாரத்தையும் சர்வாதிகாரத் தீர்வையும் விரும்பும் தலைவர்களுக்கு எதிராக எந்தவொரு அறிக்கையையும் சமர்ப்பிக்க முடியாது. அதனால், எந்தவொரு பயனும் இல்லை என்று அமெரிக்காவின் இந்தத் தீர்மானம் இலங்கைக்குக் கூறியிருக்கின்றது.

அடுத்த கட்ட தீர்வு நடவடிக்கைக்காக பரிந்துரைகள் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அந்த நடைமுறைக்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதி இருந்தால் தான் நடக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது. எனவே இந்தத் தீர்மானத்தால் அரசாங்கத்துக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர, எதிர்ப்பாக ஒன்றும் நடக்கப் போவதில்லை இவ்வாறு சோமவன்ச அமரசிங்க இச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8;11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவைச் சேர்ந்த

**சுந்தரமூர்த்தி நவநேசன்**

அவர்கள் 23.03.2012 இல்
யாழ். மாவட்ட நீதிபதி
மா. கணேசராஜா
அவர்களின் முன்னிலையில்
அகில இலங்கை
சமாதான நீதவானாகப்
பதவிப் பிரமாணம் செய்து

கொண்டார். இவர் சகல சம்பத்தும் பெற்று சிறப்புடன் சேவையாற்ற வேண்டும் என்று நயினை நாகபூசணி துணையுடன் வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் :

திரு. திருமதி காசிநாதன் கமலா குடும்பம்
திரு. திருமதி உமாசுதன் தேவா குடும்பம்
திரு. திருமதி பேரின்பநாயகம் குடும்பம் (ஜேர்மனி)

(8017)








**கட்டிட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், ரெரோசோ, புளம்பிங், சுற்றுமதில், வயரிங், பெயின்ரிங், கிறில், மரவேலை சிறப்பாகச் செய்து கொடுக்கப்படும்.

**தவா கொன்ஸ்ரக்சன்ஸ்**
அச்சுவேலி. T.P.: 0771391623

(8006)



**EASY ENGLISH**

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
**புதிய உயர் கல்லூரி**
விபரங்களுக்கு :0773212711

(7379)

## இன்று ஒரு தகவல்

### நல்ல தீர்ப்பு

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். மிகவும் நல்லவர்... ஒருநாள் அரண்மனையிலே விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒரு வழக்கு.

ஒரு விவசாயி வந்து புகார் கொடுத்தார். என்ன புகார் என்றால், அவர் வயலிலே ஆடுகள் வந்து மேய்ந்து பயிரை அழித்துவிட்டது. "நிறைய உழைத்து, செலவு செய்து, பயிரை வளர்த்து வைத்திருந்தேன்... எல்லாம் அழிந்து போய்விட்டது. எதிர்வரும் காலத்தில் நான் என்ன செய்வது? நீங்கள் தான் சரியான தீர்ப்பு வழங்க வேண்டும்" என்று அந்த விவசாயி எடுத்துரைத்தான்.

"அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என்று ராஜா உத்தரவிட்டார்.

சேவகர்கள் போனார்கள்... அவரை அழைத்தார்கள். ஆட்டுக்காரனும் வந்தான்.

ராஜா விசாரித்து முடித்து விட்டு தீர்ப்பு வழங்கினார். "விவசாயி அடைந்திருந்த இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை அவரிடமே கொடுத்து விடவேண்டியது தான்" என்று சொல்லிவிட்டார்.

இவை அனைத்தையும் மன்னனுடைய மகன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

இந்தத்தீர்ப்பை இன்னும் சிறப்பாக வழங்கியிருக்கலாம் என்று நினைத்தார். உடனே தந்தையிடம் சென்றார். தீர்ப்பைப் பற்றி விளக்கம் கூறினார். உடனே அரசன் "சரி நீயே இதற்குச் சரியான தீர்ப்புச் சொல்" என்றான்.

அந்த இளவரசன் தீர்ப்பு சொன்னான்.

"உமது ஆடுகள் அனைத்தையும் ஓர் ஆண்டு காலத்துக்கு அந்த விவசாயிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த ஒரு வருடத்திற்குள்ளே அந்த ஆடுகள் போடுகிற குட்டிகள், பால், எரு அனைத்தும் விவசாயி எடுத்துக் கொள்ள வேண்டியது. ஒரு வருடத்திற்குப் பின்னர் உமது ஆடுகளை நீ திரும்ப வாங்கிக்கொள்ள வேண்டியது" இது தான் இளவரசன் கூறிய தீர்ப்பாகும்.

"இது சரியான தீர்ப்புதான். இனி எனது அரச பொறுப்பு க்களை இளவரசன் வசம் ஒப்படைக்கின்றேன்" என்று கூறிவிட்டு ஒப்படைத்தார்.

ஒரு தண்டனையைப் பெறுகிறவன் அதன்பின் சமூகத்திலே நல்லவிதமாக வாழ வாய்ப்பு இருக்கிற மாதிரி அமைய வேண்டும் தீர்ப்பு! அதற்கு இது ஓர் உதாரணம்.

இதேவேளை இன்னொரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் போட்டி வைத்தார். என்ன போட்டியென்றால்... அரண்மனை வாசலிலே ஒரு பெரிய நீச்சல் குளம். அதிலே நிறைய விஷப்பாம்புகள்.

எந்த இளைஞன் துணிச்சலாக அந்த நீச்சல் குளத்திலே குதித்து... நீந்தி... கரையேறி வருகிறானோ அவனுக்கு 100 ஏக்கர் நிலம் பரிசாக வழங்கப்படும். அது வேண்டாம் என்றால் ஆடுகள் பரிசாக வழங்கப்படும். அதுவும் வேண்டாம் என்றால் எனது மகளை திருமணம் செய்து கொள்ளலாம். இதுதான் மன்னருடைய அறிவிப்பு.

பரிசெல்லாம் நன்றாக இருக்கிறது. இருந்தாலும் பாம்புகள் நிறைந்த நீச்சல் குளம் என்பது நன்றாகத் தெரியும். அதனாலே யாரும் அதிலே குதித்து நீந்த முன்வரவில்லை.

இருந்தாலும் திடீரென்று ஒரு இளைஞன் அந்தக் குளத்திலே குதித்தான். நீந்தினான் ஒருவாறாக கரையேறிவிட்டான். மன்னருக்கு மிகவும் மகிழ்ச்சி "நீதான் தைரியமான இளைஞன் வா என்று அழைத்தார்" அவனும் அருகே சென்றான்.

"உனக்கு 100 ஏக்கர் நிலம் வேண்டுமா? வேண்டாம் என்றான். சரி... அப்படியென்றால் ஆயிரம் ஆடுகள் வேண்டுமா?" என்றார்.

"அதுவும் வேண்டாம்" என்றான்.

"ஓ... அப்படியென்றால் என் மகள் வேண்டுமா?" என்றார். "அதுவும் வேண்டாம்" என்றான்.

ராஜாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அப்படியென்றால் உனக்கு என்னதான் வேண்டும்" என்று அரசன் கேட்டார்.

"என்னைப் பிடித்து இந்தக்குளத்திலே தள்ளிவிட்டவன் யார்? என்று எனக்குத் தெரியவேண்டும்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## 48 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக பயிர்ச்செய்கை

(மல்லாவி)

ஆலங்குளத்தின்கீழ் 25 ஏக்கரிலும் துணுக்காய் குளத்தின்கீழ் 16 ஏக்கரிலும் அணிஞ்சியன் குளத்தின்கீழ் 5 ஏக்கரிலும் சொக்கன் குளத்தின்கீழ் 2 ஏக்கரிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளன.

துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள சிறிய குளங்களின் சிறுபோக நெற்செய்கை தொடர்பான காணிப்பங்கீட்டுக் கூட்டம் கடந்த 20ஆம் திகதி காலை 10 மணிக்கு துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றபோதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆலங்குளம், துணுக்காய் குளம், அணிஞ்சியன் குளம், சொக்கன் குளம் ஆகிய குளங்களின் கீழ் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள், கமக்காரஅமைப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-3-15)

## கலந்துரையாடல்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/சண்முகரட்ணம் வித்தியாலயத்தின் அபிவிருத்தி தொடர்பான பெற்றோர் ஆசிரியர் ஒன்றுகூடல் இன்று திங்கட்கிழமை பி.ப 2.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அதிபர் த.இரவீந்திரநாதன் அறிவித்துள்ளார்.

இவ் ஒன்றுகூடல் நிகழ்விற்கு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் வழங்கவுள்ளார்.

அத்தோடு துணுக்காய் கல்வி வலய திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன், கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.விஜயபாலா, ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப்பணிப்பாளர் த.பங்கயச்செல்வன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே, மு/மாங்குளம் மகாவித்தியாலயம், மு/சண்முகரட்ணம் வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விபயிலும் மாணவர்களின் பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-15)

## கிளி. தொழில் திணைக்களத்திற்கு சொந்தக்கட்டடம் விரைவில்

(சிவநகர்)

கிளி.மாவட்ட தொழிற் திணைக்களம் தற்போது கரைச்சி பிரதேச செயலகத்தில் தற்காலிகமாக இயங்கிவருகிறது.

இத்திணைக்களமானது முன்னர் யுத்தத்தினால் சேதமடைந்த அக்கட்டடத்தை தற்போது நிக்கொட் உதவியுடன் 2.9 மில்லியன் செலவில் சொந்தக்கட்டடம் 155 ஆம் கட்டையில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இக் கட்டட வேலைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முடிவடையும் எனவும் தொழிற்திணைக்களம் ஏப்ரல் மாதம் தொடக்கம் சொந்தக் கட்டடத்தில் இயங்குமெனவும் சிரேஷ்ட தொழில் உத்தியோகத்தர் கே.பிரசன்னா தெரிவித்துள்ளார். (அ-7-254)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 55 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 65 | 90 | 65 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 35 |
| தக்காளி | 15 | 30 | 10 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 25 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 30 | 20 | 30 |
| புடோல் | 25 | 40 | 20 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 35 |
| சின்ன வெங்காயம் | 50 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 75 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 60 | - |
| பயற்றங்காய் | 80-100 | 70 | 60 |
| லீக்ஸ் | 70 | 70 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | - | 60 | 50 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 200-400 |
| போஞ்சி | 40 | 70 | 40 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 35 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 30 |
| வெங்காயப்பூ | - | 90 | - |

## இராசி பலன்

*26.03.2012*
*(பங்குனி 13, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*சதுர்த்தி பின்னிரவு 4.09 மணிவரை*
*பரணி முன்னிரவு 8.09 மணிவரை*
*இராகுகாலம் 7.44-9.14 மணிவரை*
*சுபநேரம் 12.14-1.44 மணிவரை*
*சக்தி கணபதி சதுர்த்தி விரதம்*

**மேடம்** குடும்பத்தினர் உங்கள் முன்னேற்றத்திற்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வேலைச்சுமை கூடும்.

**இடபம்** சிரித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகள் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பிரியமான சிலருக்காக செலவுசெய்யும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் முன்னேற்றமுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**கடகம்** நண்பரின் மத்தியில் பாராட்டும் புகழும் அதிகரிக்கும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணத்தால் பண வரவு கிடைக்கலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறதியால் தவறிய காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், எதிர்ப்புக்கள் குறைந்து வியாபார விருத்தி ஏற்படும், சாமர்த்தியமான பேச்சால் சாதனை படைப்பீர்கள்.

**கன்னி** சஞ்சலங்கள் தீர சந்திரனை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் செலவாகலாம், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பக்கத்தில் இருப்பவர்கள் உங்களுக்கு உதவி செய்ய முன் வருவர், உடன் பிறப்புக்கள் மூலம் அனுகூலமுண்டு, திடீர் பயணங்களால் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், மாமன், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பொருள் வரவில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்** உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வீண் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உடன் பிறப்புகளின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள்.

**மீனம்** குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சேமிக்கும் பழக்கம் அதிகரிக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் சாதகமாக அமையும்.

வளவன்

## ஜெனிவாத் தீர்மானம் பங்குச்சந்தையில் உடனடி செல்வாக்கு செலுத்தவில்லை

ஜெனிவாவில் இடம்பெற்ற இலங்கைக்கெதிரான அமெரிக்க பிரகடனம் இலங்கைக்கு பாதகமாக நிறைவடைந்துள்ள போதிலும், கடந்த வெள்ளிக்கிழமை பங்குச்சந்தை நடவடிக்கைகள் அதிகரிப்பை காண்பித்திருந்தன.

கடந்த வாரம் ஜெனிவாத் தீர்மானம் இலங்கை பங்குச் சந்தையில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்த்திருந்த போதிலும், முடிபானது எவ்வித மறைத்தாக்கத்தையும் சந்தையில் ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வாரமும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பங்குகள் அதிகளவில் கைமாற்றப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, பங்குச்சந்தை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது.

பெருமளவிலான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பங்கு கொள்வனவில் அதிக ஆர்வத்தை காண்பித்த வாரமாக கடந்த வாரம் பதிவாகியிருந்தது.

## ரூபாயுக்கு நிகரான டொலரின் பெறுமதி உறுதியடையும்-ஜயசுந்தர

எதிர்வரும் புத்தாண்டு கொண்டாங்களை தொடர்ந்து, டொலரின் பெறுமதி உறுதியடைந்து 125.00 ரூபாயை அண்மித்து காணப்படுமென திறைசேரியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், தற்போது நாம் பண்டிகைக் காலத்தை எதிர்நோக்கியுள்ளோம்.

இதனால் கேள்வி அதிகரித்துள்ளது.

அத்துடன் வேதனமும் கடந்த காலங்களை விட அதிகரித்துக் காணப்படுகின்றது. பெரும்போக விளைச்சலும் எமக்கு சாதகமாக காணப்படும் நிலையில், புத்தாண்டு கொண்டாட்டங்களை தொடர்ந்து ரூபாயுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி உறுதியடைந்து 125.00 ரூபாயை அண்மித்து காணப்படும் என்றார்.

கடந்த வாரம் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி சுமார் 132 ரூபாயாக காணப்பட்டதாக நாணயமாற்று முகவர்களின் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.32 | 132.08 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.35 | 209.66 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.42 | 175.23 |
| சுவிஸ் பிராங் | 139.41 | 145.75 |
| கனேடிய டொலர் | 127.50 | 133.01 |
| அவுஸ்திரேலிய டொலர் | 132.47 | 138.49 |
| சிங்கப்பூர் டொலர் | 100.97 | 105.20 |
| ஜப்பான் யென் | 1.53 | 1.60 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.54 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.44 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வட மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்கும் புரிந தயாரிப்புகள்



3 தசாப்த காலமாக இடம்பெற்று வந்த யுத்த சூழ்நிலை நிறைவடைந்து, தற்போது பல்வேறு துறைகளில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அபிவிருத்தி பணிகளுக்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதில் UTE நிறுவனம் முழு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றது.

இந்த உபகரணங்களில் வெல்டிங் தயாரிப்புக்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இலங்கையில் வெல்டிங் உருக்கு தயாரிப்பு உபகரணங்களை சந்தைப்படுத்துவதில் UTE நிறுவனம் சுமார் 25 வருட கால அனுபவத்தைதன்னகத்தே கொண்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் வெல்டிங் உருக்கு தயாரிப்பு உபகரணங்களை விநியோகிப்பதில் முன்னணியில் திகழும் நிறுவனம் UTE என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வெல்டிங் உபகரணங்களில் உலகப் புகழ்பெற்ற நாமங்களான சிக்வெல்ட் மற்றும் அபிகொர் பின்செல் போன்ற தயாரிப்புக்களின் ஏக விநியோகஸ்தர்களாக இலங்கையில் UTE நிறுவனம் செயற்படுகின்றது.

இந்த வெல்டிங் தயாரிப்புக்கள் குறித்து UTE நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ப்ரியாத் பெர்ணாண்டோ கருத்து தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தைப் பொறுத்த மட்டில், நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை தொடர்ந்து துரித வளர்ச்சியை எதிர்கொண்டு வருகின்றது. இதில் பல்வேறுவகையான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது, வெல்டிங் தயாரிப்புக்கான கேள்வி அதிகரித்து காணப்படுகின்றது. இதனை கருத்தில்கொண்டு நாம் வட மகாணத்திலும் இந்த சிக்வெல்ட் வெல்டிங் தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், இது குறித்து வாடிக்கையாளர்களையும் விநியோகஸ்தர்களையும் அறிவுறுத்தும் வகையில் பயிற்சிப் பட்டறை ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளோம். இத் தயாரிப்புக்கள் குறித்து வாடிக்கையாளர், விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்துவதன் மூலம் நவீன தொழில்நுட்பத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றார்.

யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றுவதற்கு வட மாகாணத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களுக்கும், நிறுவனங்களுக்கும் UTE நிறுவனம் அழைப்பு விடுத்திருந்தது.

யாழ்.குடாநாட்டில் தனது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஒரு அங்கமாக UTE நிறுவனம் இந்த பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்திருந்ததுடன், குடாநாட்டின் வெல்டிங் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்தும் தனது பிரசன்னத்தை குடாநாட்டில் கொண்டிருப்பதற்கான நடவடிக்கைகளை UTE நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

சிக்வெல்ட் வர்த்தக நாமத்தின் கீழ் தொழிற்சாலைசார் வெல்டிங் தயாரிப்புக்கள், வெட்டும் உபகரணங்கள், வெல்டிங் இலக்ட்ரோட்ஸ் மற்றும் வெல்டிங் ஹெல்மெட் வகைகள் போன்றவற்றையும் விநியோகித்து வருகின்றது.

அபிகொர் பின்செல் எனும் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த வர்த்தக நாமத்தின் கீழ் வெல்டிங் டோர்ச் வகைகள், உதிரிப்பாகங்கள் மற்றும் வெவ்வேறு உறுதியான உதிரிப்பாகங்களும் தயாரிக்கப்பட்டு UTE நிறுவனத்தின் மூலம் இலங்கையில்விநியோகிக்கப்படுகின்றன.

UTE நிறுவனத்தின் வெல்டிங் தயாரிப்புக்கள் பிரதானமாக கட்டிட நிர்மாணத்துறை, கப்பல் போக்குவரத்து மற்றும் அதியுயர் உற்பத்திதுறைகளிலும் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சிக்வெல்ட் மிதமான உருக்கு இரும்பு தயாரிப்புக்கள் அதிகளவு அனுகூலங்களை வழங்கக்கூடியதென்பதால், உள்ளூர் தொழில்துறையினரிடையே பெருமளவு வரவேற்பைப் பெறும் என UTE நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5449.05 | 5422.33 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4864.25 | 4847.86 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 5,415.63

உயர்வடைந்த பங்குகள்(ரூ) சிரஸ் லிசர்(W)(6.40), இண்டஸ்ரியல் அஸ்ப்(410.00), ஹேகொல்(103.10), சிடிபி(X)(51.40), ஹேலீஸ் எக்ஸ்போர்ட்(31.40).

வீழ்ச்சியடைந்த பங்குகள்(ரூ) எச்டிஎப்சி(70.40), கொகோ லங்கா(X)(33.00), நேஷன் லங்கா(W)(3.40), சிகிரியா விலேஜ்(68.00), மிரமர்(119.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## எரிபொருள் பாவனை செலவில் இருந்து விவசாயிகளுக்கு விடுதலையளிக்கிறது

### ஈ.பி. கிறேசி நிறுவனம்

இலங்கையில் 134 வருடகால பழமை வாய்ந்ததும் மக்களின் நம்பிக்கையை வென்றதுமான ஈ.பி. கிறேசி நிறுவனம் விவசாயிகளின் எரிபொருள் பாவனை சிரமங்களில் இருந்து தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக அறிமுகப்படுத்திய சூரிய சக்தியில் இயங்கும் நீர்ப் பம்பிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் அறிமுகப்படுத்தி, பாரிய வெற்றியை பெற்ற சூரியசக்தியினாலான நீர்ப்பம்பிகளை இந்நிறுவனம் யாழ். மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களுக்கும் அறிமுகப்படுத்துவதில் பெரும் மகிழ்வடைகின்றனர்.

இந் நீர்ப்பம்பிகளை பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் பின் வரும் அனுகூலங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

1.தவணைக் கட்டணம் செலுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யும் வசதி. இதற்காக இலங்கையின் இரண்டு பிரதான வர்த்தக வங்கிகளான கொமர்ஷல்வங்கியும், எச்.என்.பி வங்கியும் வசதி செய்கின்றன.

2. எரிபொருள் பாவனையில் இருந்து முற்றாக விடுதலையளிக்கின்றது.


3. பெண்கள் மற்றும் சிறுவர்களால் கூட இலகுவாக இயக்க முடிதல். எந்த விதமான பாவனைச் சிரமங்களோ மின்சார தாக்கமோ இருக்காது.

4. காலநிலை பாதிப்புக்களால் எவ்வித தாக்கமும் ஏற்படாது. அதாவது, சூரிய வெளிச்சம் இல்லாத சந்தர்ப்பத்திலும் இயங்கக்கூடிய திறமையினைக் கொண்டுள்ளது.

5. விரும்பிய அளவுகளுக்கேற்ப நீர்ப் பம்பியினையோ அல்லது சூரிய கலத்தினையோ கொள்வனவு செய்ய முடியும். சூரிய கலத்தின் அளவுக்கேற்ப நீர்ப்பாய்ச்சும் அளவும் வேறுபடும்.

6. 2 ஆண்டுகளின் பின் எவ்வித செலவுகளும் அற்ற பயன்பாடு.

உதாரணமாக ஒரு ஏக்கருக்கு பயிர்செய்யும் விவசாயி ஒருவர்



மாதாந்தம் எரிபொருள் செலவாக ஏறத்தாழ 7000 ரூபாய் செலவு செய்யவேண்டி ஏற்படும். இதன்படி 2 வருடத்திற்கு 168,000 ரூபாய் செலவாகின்றது. அத்துடன் புதிய சிறந்த நீர்ப்பம்பி ஒன்றினை கொள்வனவு செய்ய வேண்டும் எனில் 50 ஆயிரம் ரூபாயும் அதற்கான ஏனைய செலவுகளாக 10,000 ரூபாயும் ஏற்படின் 2 ஆண்டுகளில் அவரது மொத்த நீர் இறைக்கும் செலவாக 2 இலட்சத்து 28 ஆயிரம் ஏற்படுகின்றது. மேலும் அதனை பெண்களோ அல்லது சிறுவர்களோ இயக்குவது என்பதும் சிரமமாகவே காணப்படுகின்றது.

எனவே இச்சூரிய சக்தியிலான நீர்ப்பம்பிகளை கொள்வனவு செய்யும் ஒருவர் மாதாந்த எரிபொருள் செலவிலும் குறைந்த தொகையான 6000 ரூபாயினையே 2 ஆண்டுகளுக்கு இதனைக் கட்டணமாக செலுத்த வேண்டும். அதன்பின் எவ்வித செலவும் இன்றி குறைந்தது 15 ஆண்டுகளுக்கு பயன்படுத்தமுடியும். மேலும் இந்நிறுவனம் பின்வரும் நலன்களையும் வழங்குகின்றது.

1. சூரிய. கலத்திற்கு 20 வருட உத்தரவாதம் வழங்குகின்றது.

2.விற்பனையின் பின் இலவச பராமரிப்புச் சலுகை,

3.இலவசமாகபொருத்துதல்வேலை.


மேலும் குறித்த பாவனையாளர் இன்னுமொரு பாவனையாளரை அறிமுகப்படுத்தும்போது அவரது ஒரு மாதாந்த கட்டணத்தினை நிறுவனம் பொறுப்பேற்கின்றது.

எதிர்காலத்தில் மேலும் எரிபொருள் விலையேறினால் தனியே நீர் இறைக்கும் இயந்திரத்தினை வைத்திருப்பதால் அது ஒரு பயனற்ற பொருளாகவே காணப்படும். எனவே எதிர்காலத்திற்கான நம்பிக்கையான முதலீடாகவும், எதிர்காலத்தில் எரிபொருள் விலையேற்றத்தினால் ஏற்படும் அச்சம் எதுவும் இன்றி விவசாய நடவடிக்கைகளை மகிழ்ச்சியு டன் மேற்கொள்ள உங்களின் சிறந்த தெரிவாக இச்சூரியகல நீர்ப் பம்பிகள் காணப்படும் என்பது உறுதி.

மேலும் இதனை விவசாயிகள் மட்டுமன்றி பண்ணைகள் தங்குமிட விடுதிகள் மற்றும் கிராமப் பிரதேசங்களில் பாவிப்பதன் மூலம் மின்சாரம் சேமிக்கப்பட்டு பின்னர் தேவைக்கேற்றபடி பயன்படுத்த முடியும்.

# நிபுணர் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் ஆணைக்குழுவில் சிபாரிசுகள் அமுல்படுத்தப்படும்

## பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவிப்பு



(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் நியமிக்கப்ப்ட்ட நிபுணர்களை கொண்ட குழுவினரது அறிக்கை கிடைக்க பெற்றதன் பின்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை அமுல்படுத்தப்படும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

சிலாபம் மாதம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் வெளிநாடுகள் கேட்டுக் கொள்வதற்கு முன்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்த பரிந்துரைகளை மூன்று விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதியினால் நிபுணர்கள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த பரிந்துரைகளில் எதனை நடைமுறைப்படுத்துவது இவைகளை நடைமுறைப் படுத்துவதால் இலங்கைக்கு ஏற்படும் நன்மை தீமை மற்றும் இதன் மூலம் சர்வ தேசத்துடன் எவ்வகைகளில் தொடர்புகளை பேணுவது என்பனவே அந்த மூன்று விடயங்களாகும்.

இவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு அறிக்கை சமர்ப்பித்ததன் பின்னரே ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் என்றார்.

(அ-2)


# அரசுக்கு எதிராக் கண்டியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றினை எதிர்வரும் 29 ஆம் திகதி கண்டி மாநகரில் நடத்த ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உட்பட பல கட்சிகளின் தலைவர்கள் குறிப்பாக மனோகணேசன், விக்ரமாகு கருணாரட்ன உட்பட பலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசுக்கு எதிராகவும் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றங்களால் மக்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் பாதிக்கப்பட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருவது குறித்து அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தவுமே இந்த ஆர்ப்பாட்ட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் மக்கள் கண்டி வெம்பிளி தியேட்டருக்கு அருகிலிருந்து இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பமாகி கண்டி மணிக் கூட்டு சந்தியை சென்றடையும். (அ-2)



யாழ். மாநகர சபையில் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற துரைசிங்கம் சோமசுந்தரத்திற்கு யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவன் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# கடனட்டை மோசடிக்கு உதவிய இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கை பிரஜை ஒருவரை கைது செய்வதற்கான விசாரணைகளை இந்திய மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

போலியான கடனட்டைகளை உபயோகித்து சுமார் 5 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர் மீது 15 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய குற்றப் புலயாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இவருக்கு உதவிகளை வழங்கிய இரண்டு இந்திய பிரஜைகளை மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இலங்கை பிரஜை உணவகமொன்றில் உபயோகிக்கப்படும் கடனட்டைகளின் பிரதிகளை பெற்று போலி கடனட்டைகளை தயாரித்து அதனூடாக பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

கடனட்டைகளின் பிரதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ள இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளதாக மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-7)

# இலங்கை மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படக் கூடும்

(கொழும்பு)

இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை உள்ளிட்ட பதினொரு நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக குறிப்பிடப்படுகிறது.

ஈரானிடமிருந்து தொடர்ந்தும் எரிபொருளை இறக்குமதி செய்யும் நாடுகள் மீது பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

இந்தோனேஷியா, மலேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர்,இலங்கை, தாய்வான் மற்றும் துருக்கி போன்ற நாடுகள் மீது நிதிசார் தடைகளை விதிக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஓமான், சவுதி அரேபியா போன்ற நாடுகளிடம் எரிபொருளை பெற்றுக் கொள்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் அழுத்தங்கைள சீனா வன்மையாக கண்டித்துள்ளது. (அ-2)

# புலிகள் மீண்டும் ஒன்றிணைந்தால் வன்முறை வெடிக்கும் அபாயம்

## ஹெல உறுமய ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீளவும் ஒருங்கிணைய முயற்சிக்கக் கூடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் மீண்டும் வன்முறைகள் வெடிக்கக் கூடிய அபாயம் காணப்படுவதாகவும் இதனால் படையினரை ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டும் எனவும் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து ஜாதிக ஹெல உறுமய கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

"நாட்டை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜெனீவா தீர்மானம் தமிழ் புலம்பெயர் மக்களுக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாகவும் புலிகள் மீள ஒருங்கிணைய அவர்கள் ஆதரவளிக்கக் கூடும் என குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700 தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு வின் பரிந்துரைகள் இலங்கையின் நலனை முதன்மையாகக் கொண்டு அமுல்படுத்தப் பட வேண்டுமே தவிர சர்வதேச சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்ய பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

படைவீரர்கள் சர்வதேச நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட மாட்டார்கள் என்பதனை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். புலிகளின் அச்சுறுத் தல்களிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்காக அரசாங்கம் விசேட செயற்றிட்டமொன்றை வகுக்க வேண்டுமென கோரிக்கைகளை அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)


சின்மயா மிஷன்- யாழ்ப்பாணம்



வழங்கும்

திருமந்திரம்

(ஆன்மீகச் சொற்பொழிவு)



வெற்றிக்கு வழிகாட்டும், மன அமைதியை ஏற்படுத்தும், ஆனந்தத்தை அள்ளித்தரும், ஆன்மீகக் கருத்துக்களை இனிய தமிழில் பகிர்ந்து கொள்ள

சங்கம் வளர்த்த மதுரையில் இருந்து வருகை தருகிறார்

சுவாமி சிவயோகானந்தா

காலம்:-28.03.2012 முதல் 31.03.2012 வரை

மாலை 5.30மணிமுதல் 6.30 மணிவரை

இடம்:-நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்

அன்புடன் அழைக்கின்றோம்! அனுமதி இலவசம்

சின்மயா மிஷன்-09,செட்டித்தெரு ஒழுங்கை ,நல்லூர்,யாழ்ப்பாணம்

தொ.பே.:0776491828, மின்னஞ்சல்:jagrat@chinmayalanka.org

# சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான குழுவினரால் கனேடிய பாராளுமன்ற குழுவினரிடம் மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் நடைபெற்ற மோதல் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மதங்களுக்கிடையிலான மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை தற்போது ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என சுமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழு சுட்டிக்காட்டியுள்ளது.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினரை யாழ். ஆயர் இல்லத்தில் கனேடியப் பாராளுமன்றக் குழுவினர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான குழுவினரால் மகஜர் ஒன்று கனேடியப் பாராளுமன்றக் குழுவினரிடம் கையளிக்கப்பட்டது. அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு இன ஐக்கியமானது இன்றியமையாத ஒன்று.

இலங்கை அரசாங்கத்திற்கு இப்போதுள்ள ஒரேயொரு வழி உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான வேலைத்திட்டங்களை நேர்வழியில் முன்னெடுப்பதே.

குற்றப்பட்டியல் விபரங்களை இருட்டடிப்புச் செய்வோமாயின் சமாதான நல்லிணக்க முன்னெடுப்புக்களில் தொய்வுநிலை உருவாகும்.

கற்றுக்கொண்ட பாடங்களுடன் நாம் நடைபோடும்போது தகைமை சார் அரசியலுடன் முன்செல்ல முடியுமென நம்பக்கூடியதாய் உள்ளது.

யுத்தம் முடிவுற்ற போதும் இன்னும் பகைமை உணர்வு இந்த நாட்டிலிருந்து அகலவில்லை.

மேலும் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்த பின்பும் மீள்குடியமர்வு, அபிவிருத்தி என்பன பூரணப்படுத்தப்படவில்லை.

மீளவும் குடியேற்றி அவர்களுடைய சொந்தத் தொழில்களை மீளவும் மேற்கொள்வதற்குரிய வசதிகளை உருவாக்கிக் கொடுத்துச் சுய நம்பிக்கையை பெறுவதற்குரிய வாய்ப்பை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

நிலப்பாதுகாப்பின் பொருட்டு உயர் பாதுகாப்பு வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மரபு வழியாக வந்த தனியாருக்கு சொந்தமான விவசாயக்காணிகள் உட்பட்ட நிலங்களும் அரசுக்கு சொந்தமான நிலங்களும் பாதுகாப்பு வேலிகள் இட்டு மண் அரண்கள் செய்யப்பட்டதோடு இராணுவத்தினருக்கும் கடற்படையினருக்குமான நிரந்தரமான கட்டடங்களைக் கொண்ட மையமாகவும் விளங்குகின்றன.

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த மக்கள் 30 வருடங்களுக்கும் மேலாக எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி நலன்புரி முகாம்களிலும் உறவினர்களோடும் வாடகை வீடுகளிலும் தொடர்ச்சியாக வசித்து வருகின்றார்கள்.

45 கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் 28 பிரிவுகள் உயர் பாதுகாப்பு வலயங்களாக இருப்பதோடு ஏறக்குறைய 26 ஆயிரத்து 281 பேர் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள்.

இப்பிரதேசமானது பொன் விளையும் பூமி என வர்ணிக்கப்படுகின்றது. சனத்தொகையில் 60வீதமானவர்கள் விவசாயிகளாகவும் 35 வீதமானவர்கள் மீனவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அரசாங்கமானது பாதிக்கப்பட்டவர்களுக்கோ அல்லது அவர்கள் மீது தங்கியிருப்பவர்களுக்கோ ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு அமைவாக முழு நட்டஈட்டையும் செலுத்த வேண்டும்.

வாழ்க்கைக்கான செலவும் கட்டட அமைப்புக்கான செலவும் 1997 இன் பின்னான கால்நூற்றாண்டுக்கு அண்மைய காலப்பகுதியில் 50 வீதத்திற்கும் மேலாக அதிகரித்திருந்தது. இது மிகவும் நியாயமற்றதாகவும் சமநிலைப்பட்ட உதவி ஒத்தாசைகளுக்கு தாமதம் ஏற்படுத்துவதாகவும் அமைந்திருந்தது.

### மொழியும் மதமும்

சிங்களம் மட்டும் சட்டம் இனக்குரோதத்திற்கு வித்திட்டது. மேலும் அரசாங்க வங்கி உத்தியோகத்தர்களின் மொழிப் பிரயோகமும் தமிழ் மொழியின் மூலக் கட்டமைவைச் சிதைக்கின்றது. தமிழ்ப் பிரதேசங்களில் காணப்படும் புத்தர் சிலைகள் பெரும்பான்மையாக இந்துக்களின் கலாசார பரம்பலுக்கு இடையூறை விளைவிப்பதால் மத பூசல்கள் இடம்பெறுவதற்குரிய களஅமைவும் உள்ளது.

### சட்டமும் கட்டளையும்

யுத்தம் நிறைவடைந்த பின் சமாதானம் உருவாகும் என்ற எண்ணோட்டம் இடம் பெற்ற போதும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விருப்பமின்மை இவ்வெண்ணோட்டத்தை பொய்ப்பித்து விட்டது.

சட்டத்தின் முன் ஒவ்வொரு மக்கள் குழுமமும் சமநிலை நிற்கும் உரித்துடையது. இந்நிலையில்தான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் அர்த்தமுள்ளதாக விளங்க முடியும்.

### கற்றுக்கொண்ட பாடமும் நல்லிணக்கமும்

1983 கறுப்பு ஜூலையின் கோர நிகழ்வுகளுக்கு எவ்வித பரிகாரங்களும் வழங்கப்படாத நிலையில் இளம்பெண்கள், சிறுவர்கள் உட்பட சகலருமே துன்புறவேண்டியதாயிற்று.

### பயங்கரவாதச் சட்டத்தடுப்பு

பேச்சுச்சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தும் இச்சட்டம் மக்கள் இச்சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது.

### கல்வி

ஒரு பிரதேசத்தின் செல்வம் கல்வியாகும் என்னும் கருத்துக்கு யாழ்ப்பாணம் ஒரு முன்னுதாரணமாக விளங்குகின்றது. பலாலி ஆசிரியர் கலாசாலை அதன் மூல இடத்தில் மீளவும் கட்டமைக்கப்படவிருப்பது இதற்கு பொருத்தமான சான்றாகும்.

### ஜனநாயகம்

புரிந்துணர்வு- விட்டுக்கொடுப்பு என்பவற்றின் அடிப்படையில் அமைந்த சமூக நல்லிணக்கத்தின்பால் ஜனநாயக விழுமியங்களைக் கட்டியெழுப்ப முடியும்.

### சமாதானம்

எமது வேலைத்திட்டத்திலுள்ள இருட்டடிப்பைத் தவிர்த்து வாழு- வாழவிடு என்பதன் அடிப்படையில் ஆரோக்கியமான அரசியல் நெறி நின்று நிலையான சமாதானத்தை பேணவேண்டும் என அவ்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது (அ-6-3)




## பதிவாளர் கடமையில் இருந்து ஓய்வுபெறுகிறார்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு குடியியல் மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற பதிவாளராக கடமையாற்றிய செல்லத்துரை சுப்பிரமணிம் (சொக்கன்) தனது 32 வருட நீதிமன்ற சேவையில் நேற்றிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பதிவாளர் தரம்-1 இல் கடமை புரிந்து ஓய்வு பெறும் இவர் ஒரு நொத்தாரிசும், அகில இலங்கை சமாதான நீதவானும் அரச மொழி பெயர்ப்பாளரும் ஆவார்.

திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள நீதிமன்றங்களிலும் கடமை புரிந்து இறுதியாக கொழும்பு மேல் மாகாண குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற பிரதம பதிவாளராக கடமை புரிந்து ஓய்வு பெறுகின்றார். (அ-4)

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத்திணைக்களத்தினால் இவ்வாண்டு உயர்தரப் பரீட்சையில் புதிய/பழைய பாடத்திட்டத்திலும் தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையிலும் தோற்றும் விசேட தேவையுடைய மாணவர்களில் பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் புலமைப்பரிசில் வழங்குவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ எம்.என். கே. புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

அதற்கிணங்க இப்புலமைப்பரிசில் சலுகையை பெற விரும்பும் விசேட தேவையுடைய மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை கல்வித்திணைக்களத்திலும் பாடசாலைகளிலும் பெற்று பூர்த்தி செய்து பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பங்களை மாச் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கு அதிபர்களும் பெற்றோர்களும் மற்றும் பாதுகாவலர்களும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (அ-7)

## மஹோற்சவம்

மாதகல்-பாணாகவெட்டி அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரிஅம்மன் ஆலய கர வருட மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை பகல் தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று அன்றையதினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன.

6ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் மஹாசங்காபிஷேகமும் நடைபெறவுள்ளதாகவும் ஆலயபரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ)


## தேசிய அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

உடுத்துறை தாழையடியைச் சேர்ந்த ஐயாத்துரை பிறேம் 900043031V என்பவரது தேசிய அடையாள அட்டை பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக்காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (அ-7)





யாழ்.வலய கல்வியலுவலகத்தினால் நடத்தப்பட்ட விசேட கல்வி தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். வலய கல்வி அலுவலகத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்டது. இச்செயலமர்வினை விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் செல்வி கே. சந்திரிகா நடத்துவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என். குமார்)



# சிறுவர் அரங்கம்


51

## அம்புலி மாமா கதைகள்

## வீட்டிற்குப் போ!

பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் அங்கு சேனகர் என்ற மாபெரும் யோகியாக போதிசத்வர் அவதரித்திருந்தார். அதேசமயம் அந்நகரை அடுத்து இருந்த ஒரு கிராமத்தில் பிச்சையெடுத்துப் பிழைக்கும் ஒரு பிராமணன் இருந்தான்.

ஒருநாள் அவன் ஏதோ



ஒரு ஊரில் பிச்சை வாங்கிக்கொண்டு காட்டு வழியே தன் ஊருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

அப்போது ஒரு அசுர வாக்கு. "பிராமணா! நீ இன்று வீட்டிற்குப் போகாமல் இருந்தால் இறந்துவிடுவாய். நீ வீட்டிற்குப் போனாலோ உன் மனைவி இறப்பாள்" என்று கூறியது.

பிராமணன் சுற்றிலும் பார்த்து யாருமே இல்லாதது கண்டு தன்னை எச்சரித்தவன் யாராவது யட்சனோ, கந்தர்வனோ அல்லது பிசாசோ என்று சந்தேகப்பட்டான். அவன் மனதில் பயம் ஏற்படவே எப்படியாவது சட்டென வீட்டிற்குப் போய்விட வேண்டும் என்று அவன் துடித்தான். ஆனால் வீட்டிற்குப் போனால் அவன் மனைவி இறந்து விடுவாளாமே. இந்த இக்கட்டான நிலையில் என்னசெய்வது என்று தெரியாமல் அவன் தவித்தான்.

அவன் நகருக்குள் நுழைந்து ஒரு வீதிவழியாகப் போனபோது சேனகரான போதிசத்வர் மக்களுக்கு தர்மோபதேசம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான். அவர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்க மக்கள் அவரைச் சுற்றிலும் கூடியிருந்தார்கள்.

இந்தப் பிராமணனும் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு போதிசத்வர் கூறியதைக் கேட்கலானான். போதிசத்வர் தம் பேச்சை முடித்ததும் மக்கள் கூட்டம் கலைந்து சென்றது. ஆனால் அந்தப் பிராமணன் மட்டும் ஆடாமல் அசையாமல் மரம்போல நின்றான்.

அவனுக்குக் காட்டில் கேட்ட அசுரவாக்கு மிகுந்த குழப்பத்தைத்தான் உண்டாக்கியிருந்தது. எப்படிப் பார்த்தாலும் கணவன்-மனைவி இருவருள் யாராவது ஒருவர் இறந்தாக வேண்டும். இருவரும் இறக்காமல் இருக்க என்ன வழி என்று காணத்தான் அவன் துடித்தான்.

அவனைக் கண்ட போதிசத்வர் தன்னருகே வரும்படி அவனுக்குச் சைகை செய்தார். பிராமணனும் அவரருகே போய் அவரை வணங்கி எழுந்து தலை குனிந்து நின்றான். போதிசத்வரும் "நீ எதற்காக இப்போது வேதனைப்படுகிறாய்?" என்று கேட்டார். பிராமணனும் காட்டில் தன்னை யாரோ எச்சரித்ததைக்கூறி "இப்போது நான் என்ன செய்வேன்? வீட்டிற்குப் போனாலோ என் மனைவி இறந்து விடுவாளாம். போகாவிட்டாலோ நான் இறந்து விடுவேனாம். இருவரும் இறக்காமல் இருக்க ஏதாவது வழிகூறுங்கள்" என வேண்டினான்.

அப்போது போதிசத்வர் "நீ அந்த எச்சரிக்கையைக் கேட்கும் முன் என்ன செய்து கொண்டிருந்தாய்?" என்று கேட்டார். "நான் ஓரிடத்தில் உட்கார்ந்து பையிலிருந்த உணவை எடுத்துச் சாப்பிட்டேன்" என்றான்.

"சரி, உன்னிடம் உணவு உள்ள பை இருக்கிறது. ஆனால் நீர் குடிக்கப் பாத்திரம் எதுவும் இல்லையே. தண்ணீர் எப்படிக் குடித்தாய்?" என்று போதிசத்வர் கேட்டார்.

"எதிரே ஒரு ஆறு இருந்தது. அங்கு போய்த் தண்ணீர் குடித்துவிட்டு வந்தேன்" என்றான் பிராமணன்.

"அப்படியானால் நீ உணவு சாப்பிட்டுவிட்டு பையை அதேயிடத்தில் விட்டுவிட்டு ஆற்றிற்குப் போனாய். அந்தப் பையில் உணவு மீதமாக இருந்ததா?" என்று போதிசத்வர் அவனைப் பார்த்துக் கேட்டார்.

அவனும் "ஆமாம் பையில் இருந்ததில் பாதியை உண்டேன். மிகுந்ததைக் கட்டி எடுத்துக்கொண்டு போய் மனைவியிடம் கொடுக்கப் போகிறேன். இதோ அந்தப்பை" என்று காட்டினான். "நீ நதிக்குப் போனபோது பையின் வாயைக் கட்டவில்லையே" என போதிசத்வர் கேட்டார். "கட்டவில்லைதான்" எனப் பிராமணன் பதிலளித்தான்.

"அப்படியானால் நதியிலிருந்து திரும்பி வந்துதான் பையின் வாயைக் கட்டினாய். கட்டு முன் அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்தாயா?" என்று அவர் கேட்டார்.


அவனும் "பார்க்கவில்லை அப்படியே கட்டியெடுத்து வந்தேன்.

இதற்குப் பின்புதான் என்னை எச்சரிக்கும் குரல் என் காதில் விழுந்தது" என்றான்.

போதிசத்வரும் "அப்படியானால் நீ ஆற்றில் போய்த் தண்ணீர் குடித்தபோது பை இருந்த இடத்தில் ஏதோ நடந்திருக்கிறது.

அநேகமாக ஒரு பாம்பு உன் பைக்குள் போயிருக்கிறது என்றே நான் நினைக்கின்றேன். அதைக்கவனித்த யட்சனோ, தேவதையோ உன்னை எச்சரித்தது. நீ வீட்டிற்குப் போகாவிட்டால் மறுபடியும் பசிக்கும்போது பையைத் திறப்பாய். அப்போது அதிலிருக்கும் பாம்பு உன்னைத் தீண்டிவிடும். நீயும் இறந்துபோவாய். நீ பையைத் திறக்காமல் வீட்டிற்குப் போனால் முதலில் பையை உன் மனைவியிடம்தான் கொடுப்பாய். அவளும் அதை ஆவலுடன் திறப்பாள். அப்போது பாம்பு அவளைக் கடிக்க அவள் இறந்துவிடுவாய்.

இதுதான் விடயம்" எனக்கூறி அப் பையைத் தான் உட்கார்ந்திருக்கும் இடத்தருகே வைக்கும்படி அந்த பிராமணனிடம் சொன்னார்.



பிராமணன் அப்போதுதான் தன் பைக்குள் பாம்பு புகுந்திருக்கிறது என அறிந்து திடுக்கிட்டான்.

.போதிசத்வர் கூறியபடியே உடனேயே அவர் பக்கத்தில் வைத்து போதிசத்வர் என்ன செய்கிறார் எனப் பார்க்கலானான்.

அப்போது அவ்வழியே சென்ற ஒரு பாம்பாட்டியை அவர் கூப்பிட்டு பையிலுள்ள பாம்பைப் பிடிக்கச் சொன்னார். அவனும் பையின் வாயை அவிழ்த்து சீறி வந்த நல்ல பாம்பைப் பிடித்து கொண்டு போய் விட்டான். அதன் பின்பு போதிசத்வர் பிராமணனிடம் "நீ இனி மேல் பயமில்லாமல் உன் வீட்டிற்கு போகலாம்" என்றார். பிராமணன் அவருக்கு தன் நன்றியறிதலை தெரிவித்து, கவலையை விடுத்துத் தன் வீட்டிற்குச் சென்றான்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணையால் இந்தியாவுக்கு பக்கவிளைவு ஏற்படும்

## பசில் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கெதிரான ஜெனீவா பிரரேரணை இந்தியாவிற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜெனீவா பிரேரணை முடிவுகள் இந்தியாவின் பிராந்திய தலைமைத்துவத்திற்கு சவாலாக அமைந்துள்ளது. தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் பெரும்பான்மையானவை என இந்தியாவிற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்தன.

இந்தியா, அமெரிக்காவிற்கு ஆதரவாக வாக்களித்தது. எனினும் மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவை வெளியிட்டிருந்தன. மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்காத பாகிஸ்தானும் இலங்கைக்கு ஆதரவை தெரிவித்திருந்தது.

இதன்படி பிராந்தியத்தின் தலைமைத்துவ பதவிக்கான தகுதியை இந்தியா இழந்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.(அ-2)

# நவநீதம்பிள்ளை அம்மையாரின் குற்றச்சாட்டில் உண்மையில்லை

## பந்துல ஜயசேகர

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிப்படுவதாக நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியிருந்தார். எனினும் இந்தக்குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என பந்துல ஜயசேகர சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் கலந்து கொண்ட மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது அரசாங்கப் பிரதிநிதிகள் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (அ-2)



சர்வதேச கிரிக்கெட் சபையின் 20:20 உலகத்தொடரின் நுழைவுச்சீட்டு விற்பனைகள் உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. காலி முகத்திடலில் இடம்பெற்றநிகழ்விலேயே விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சர்வதேச கிரிக்கெட் குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட், ஸ்ரீலங்கா கிரிக்கெட் தலைவர் உபாலி தர்மதாச, பிரதித்தலைவர் அசங்க செனவிரத்ன ஆகியோர் முன்னிலையில் பற்றுச்சீட்டு விற்பனையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

# கிழக்கு மாகாணத்திற்கென தனியான் தொல்பொருள் கொள்கை

(கொழும்பு)

கிழக்கு மாகணத்திற்கு தனியான தொல்பொருள் கொள்கையொன்றை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அகழ்வாராய்ச்சி தொடர்பில் கிழக்கு மாகாணத்தில் தனியான சில கொள்கைகள் பின்பற்றப்பட உள்ளன.தொல்பொருள் அமைச்சு, தொல்பொருள் ஆண்ணயாளர் உள்ளிட்ட தரப்பினர் இந்தக் கொள்கை வகுப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முழுமையான அதிகாரமுடைய தொல்பொருள் ஆணையாளர் நாயகம் ஒருவரை கிழக்கு மாகாணத்திற்கு என தனியாக நியமிக்க திட்டமிட்டுள்ளது. நிலக்கீழ், நிலத்திற்கு மேல் , கடலோரம், வாவி, குளம்,அருவி சகல தொல்பொருட்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் முழு அதிகாரம் மாகாண தொல்பொருள் ஆணையாளருக்கு வழங்கப்படவுள்ளது.

புதிய. அகழ்வாராய்ச்சி கொள்கையில் தமிழ் மொழியில் கூறப்பட்டுள்ள விடயங்களை முதன்மையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நாட்டின் பல அரிய தொல்பொருள் பொக்கிஷங்கள் கிழக்கு மாகாணத்தில் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியது

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபாடு கிராம கடற்கரையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலத்தை முந்தல் பொலிஸார் நேற்றுமுன் தினம் மீட்டுள்ளனர்.

அப்பிரதேச மீனவர்கள் நேற்றுமுன் தினம் காலை வழமை போன்று கடற்றொழிலுக்காகச் சென்ற போது கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியிருப்பதைக் கண்டு முந்தல் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சுமார் 45 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலத்தில் ஆடைகள் எதுவும் காணப்படவில்லை, இருப்பினும் சடலத்திற்கு அருகில் துணியொன்று காணப்படுகின்றது. தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டுள்ளதுடன் சடலத்தின் வயிற்றுப் பகுதியில் தீக்காயங்கள் சில காணப்படுவதாகவும் முந்தல் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# ஜனாதிபதிக்கு அழைப்பு

12 ஆவது டோஹா மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு டோஹா கட்டாரின் அமீர் அழைப்பு விடுத்துள்ளார். இலங்கையில் உள்ள கட்டார் தூதுவர் செய்யத் அப்துல்லாஹ் அல்- மன்சூர் - கட்டார் அமீரின் அழைப்பை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இந்த அழைப்பை ஏற்ற ஜனாதிபதி இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நீண்டகால பரஸ்பர நல்லுறவை நினைவுபடுத்தியதோடு விஷேடமாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் கட்டார் அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# இறையாட்சியுடன் நாட்டிலும் அமைதியை நிலைநாட்டும் கருவிகளாவோம்



இயேசுவின் காலத்தில் ஏழைகள் எல்லோரும் பாவிகள், கடவுளின் சாபமே ஏழ்மை, பொறுமையை வாழ்வில் கொள்பவன் கோழை, சாந்த குணநலத்தோடு இறைவனை நாடுபவன் ஏமாளி, நீதி பேசுபவன் உலகம் தெரியாதவன், அமைதியாய் வாழ்பவன் ஒன்றுக்கும் உதவாதவன். பணம் படைத்தவனும் அதிகாரத்தில் இருப்பவனுமே பாக்கியவான் என்ற ஒரு தப்பான எண்ணமே அவர்கள் மத்தியில் இழையோடியிருந்தது. இவ்வாறான சூழ்நிலையில்தான் உண்மையில் நீதி, அன்பில் தோழமை, உரிமை பெறுவதில் சமத்துவம் என்ற மதிப்பீடுகளுடன் வாழ்வுக் கான வழிகளையும் இறையரசின் தன்மைகளையும் முழக்கமிடுகின்றார் இயேசு.

எளிய மனம் துயருறுவோர் மீது பரிவு, கனிவான மனநிலை, நீதியை வாழும் வாழ்வு, இரக்க குணம், சமாதான உறவு, துன்பத்தை மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் என்பனவாகும். அனைவராலும் ஒதுக்கப்பட்ட ஏழைகளை இறையாட்சியின் மைந்தர்களாக காண்கின்றார் இறைமகன் கிறிஸ்து.இன்று பல்வேறுபட்ட துன்பங்களால் வருத்தப்பட்ட நிலையில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் நாம் வாழ்வது கண்கூடு. இருந்தா லும் நாம் இறையாட்சியின் மைந்தர்களாக வேண்டுமெனில் இவற்றை பொறுத்துக்கொண்டு மலைப்பொழிவைத்தரும் மனநிலையில் நடக்க முன்வரவேண்டும். எம்மில் தலைவிரித்தாடும் அகந்தையை அகற்ற வேண்டும். எங்கள் குடும்பத்திலும் சமுதாயத்திலும் துன்பப்படுவோருக்கு உதவி செய்ய எப்போதும் தயாராக இருக்கவேண்டும்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

அநீதிகளை எதிர்த்து சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட பாடுபட வேண்டும். பொய்மையை ஒழித்து எங்கும் உண்மை ஒளிபரவ வழியமைக்க வேண்டும்.

குழப்பங்களும் முரண்பாடுகளும் வன்முறைகளும் நிறைந்த எமது வாழ்விடங்களிலும் நாட்டிலும் அமைதியை நிலைநாட்டும் கருவிகளாக நாம் துலங்க வேண்டும். கிறிஸ்துவின் வழியில் நடந்து ஏழ்மை நிலையைப் பின்பற்றி எமது வாழ்வால் கிறிஸ்துவின் மலைப்போதனைக்கு சான்று பகரும் போதே நாம் இவ்வுலகில் மனிதத்தை வாழ முடியும்


# ஓராண்டு நினைவுகளுடன்...

அன்னையின் மடியில் 28 . 02 . 1984



ஆண்டவன் அடியில் 08 . 04 . 2011

செல்வராசா அன்புமணியின் செல்வப் புதல்வி

**அமரர் செல்வி செ. அனுஷா**

(ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)

திதி:-27.03.2012 (செவ்வாய்க்கிழமை)

எமது அன்பு மகளின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


சில்லாலை தெற்கு.
சாந்தை.
பண்டத்தரிப்பு,

என்றும் உன்நினைவுடன்
குடும்பத்தினர்.

(7776)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 81



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்

தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்



மத்திய, வரோனிஸ், ஸ்டெப்பி மற்றும் தென்மேற்கு சேனைகளின் துருப்புகள் தினேப்பர் ஆற்றை வெற்றிகரமாகக் கடந்ததன் விளைவாய் தினேப்பரில் எதிரியின் தற்காப்பு- "கிழக்கு அரணின்" மிகவும் பலப்படுத்தப்பட்ட இப்பிரதேசம் பிளக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது தினேப்பரில் தனது தற்காப்பைப் புனரமைப்பதற்காக எதிரி தொடுத்த மூர்க்கத்தனமான பதிலடிகளை (குறிப்பாக கீவ் பிரதேசத்தில்) சோவியத்துருப்புகள் முறியடிக்க வேண்டியிருந்தது. **நவம்பர் 6 ஆம் திகதி கீவ் நகரம் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடிவிக்கப்பட்டது.** தினேப்பருக்கான சமரின் போது சோவியத் துருப்புகள் எதிரியினுடைய தெற்குப்படைத் தொகுதியின் பிரதான சக்திகளுக்கும் சென்டர் படைத் தொகுதியின் ஒரு பகுதிக்கும் பெரும் தோல்வியை ஏற்படுத்தின, 160 நகரங்கள் உட்பட 38 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புப்பகுதிகளை விடுவித்தன.

பாலங்களை அமைத்தல், கடக்கும் வழிகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் கெரில்லாப் படை வீரர்களும் உக்ரேனிய மக்களும் சோவியத் போர் வீரர்களுக்குப் பெரிதும் உதவினர். சோவியத் துருப்புகள் தினேப்பரை நெருங்கியபோது உக்ரேனிய கெரில்லாப் படை வீரர்கள் மட்டும் தினேப்பர் மீதான 12 கடக்கும் வழிகளையும் பிரிபியாத்மீது 10 கடக்கும் வழிகளையும் தெஸ்னா மீது 3 கடக்கும் வழிகளையும் கைப்பற்றி இத்துருப்புகளுக்காகப் பாதுகாத்து வைத்திருந்தனர்.

தினேப்பருக்கான சமரின் போது செஞ்சேனை தினேப்பர் ஆற்றில் உறுதியான தற்காப்பை ஏற்படுத்தும் ஹிட்லர் படைத் தலைமையின் திட்டத்தைச் சீர்குலைத்தது, எதிரிக்கு பெரும் ஆட்சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தியது, மேற்குக் கரையோர உக்ரேன் முழுவதையும் முற்றிலுமாக விடுவித்து மேற்கு உக்ரேனையும் தெற்கு போலந்தையும் அடைவதற்கான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. உக்ரேனின் செல்வங்கொழிக்கும் விவசாயப் பிரதேசங்களும் நாட்டின் மிக முக்கிய தொழிற்துறை, எரிபொருள் மையமாகிய தன் பாஸூம் தாயகத்திற்குத் திருப்பிப் பெற்றுத்தரப்பட்டன. யுத்தத்தின் போக்கில் அடிப்படை மாற்றம் முற்றிலுமாக நிறைவேறியது.



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்

தினேப்பருக்கான சமரில் சோவியத் போர்க்கலை மேற்கொண்டு வளர்ச்சியடைந்தது. தாக்குதலைத் தயார்ப்படுத்தி உயர்வான வேகத்தில் இதை நடத்துதல், சேனைகளுக்கு இடையே திட்டவட்டமான பரஸ்பர செயலாக்கத்திற்கு ஏற்பாடு செய்தல், போர்த் தந்திர சேமப் படைகளைப் பயன்படுத்துதல், ஆழத்தில் முனைப்பான செயல்களை அதிகப்படுத்தல் ஆகியவை சம்பந்தமான அனுபவத்தால் இது செழுமை அடைந்தது. திட்டமிட்டு தயார்ப்படுத்தியும் போகிறபோக்கிலும் சோவியத் இராணுவம் பெரும் நீர் தடைகளைத் திறமையாகக் கடந்தது, பீரங்கிகள், விமானப் படையை பெருமளவில் பயன்படுத்துதல், கண்ணிவெடித் தடைகளை திறமையாக அமைத்தல் இரவுநேர இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுசெய்து அவற்றை நடத்துதல், ஓர் இயங்கு திசையிலிருந்து இன்னொரு திசைக்கு துருப்புகளை இடம்மாற்றுதல் ஆகியவற்றின் மூலம் எதிரியின் பதிலடிகளை முறியடிப்பதில் நல்ல அனுபவம் அடையப்பட்டது.



தினேப்பர்- கீவ் சமரின்போது செய்த தியாகங்களைநினைவுகூறும் நினைவாலயங்கள்

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

தினேப்பர்- கீவ் சமரில் பங்கு கொண்ட பலமில்லியன் கணக்கான வீரத்திருமகன்களுக்கான ஸ்டாலின் கிராட்டினால் வழங்கப்பட்ட பதக்கங்கள்



அக்டோபர் தொடக்கத்தில் சோவியத்துருப்புகள் வித்தெப்ஸ்க், ஓர்ஷா, மொகிலோவ், கோமெல்- பப்ருய்ஸ்க் திசைகளில் தாக்குதலைத் திரும்பவும் தொடங்கி, ஆண்டு இறுதியில் பைலோருஷ்யாவின் பல கிழக்கத்திய பிரதேசங்களை விடிவித்தன.

1943 ஆம் ஆண்டு செஞ்சேனையின் பலம்மிக்க கோடைக் கால- இலையுதிர்கால நடவடிக்கை கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் நீடித்தன. இது அற்புதமான வெற்றிகளுடன் முடிவடைந்தது.

(தொடரும்)

## பொறிக்கடவை அம்மன் ஆலய வேள்வி

(சிவநகர்)

குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள் மிகு கண்ணகை அம்மன் பங்குனி வேள்வி எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி (3 ஆம் பங்குனித் திங்கள்) சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதன்போது பகல், இரவு விசேட பூசைகள் இடம்பெற்று மறுநாள் விடியற்காலை வேள்வி இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் பக்தர்களின் காவடி, நேர்த்திக்கடன்கள் இடம்பெறவுள்ளதால் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள், போக்குவரத்து ஒழுங்குகள் ஆலய பரிபாலன சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (அ-7-254)

# இந்தியா மீதான நம்பிக்கை சிதறடிக்கப்பட்டு விட்டது

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார செயற்றிட்டங்களின் போது இந்தியாவுக்கு தேவையற்ற சலுகைகளை அளித்து அந்நாட்டுடன் ஒப்பந்தங்களில் ஈடுபடக்கூடாது என்று ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அரசியல் அங்கம் வகிக்கும் கடும்போக்கு தேசிய வாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை அரசு பொருளாதார மற்றும் பாதுகாப்பு திட்டங்களை முன்னெடுக்கும் போது இந்தியாவின் நலனைக் கருத்தில்கொண்டே செயற்பட்டதாகவும் ஹெல உறுமய தலைவர் கூறியுள்ளார்.

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் போது இந்தியா மீது இலங்கை வைத்திருந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது என்றும் ஹெல உறுமய கட்சி கூறுகின்றது.

நாட்டின் ஒருமைப்பாட்டை பிளவுபடுத்த தமிழ்த்தேசியக் கூட்மைப்பு உள்ளிட்ட விடுதலைப் புலி ஆதரவாளர்கள் முயற்சித்து வருவதாகவும் ஹெல உறுமய தலைவர் குற்றஞ்சாட்டினார்.

இவ்வாறான முயற்சிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக சிறப்பு நீதிமன்றக் கட்டமைப்பொன்றை அமைக்க வேண்டும் என்பது ஜாதிக ஹெல உறுமயவின் கருத்து.

அமெரிக்காவின் முன்னெடுப்பில் ஜெனீவா மனித உரிமைகள் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பின்னரான நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் சம்பிக்க ரணவக்க கூறினார். (அ-2)

# தமரா குணநாயகம் சீ.ஐ.ஏ.உளவாளியாம்

## திவயின கூறுகிறது



சுவிஸில் உள்ள இலங்கைத் தூதுவரும் ஜெனீவாவில் உள்ள ஐ.நா. பிரதிநிதியுமான தமரா குணநாயகம் சிங்களவர்களுக்கெதிரான துரோகி என்றும் அவர் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான சீ.ஐ.ஏஇற்கு பணியாற்றி வருகின்றாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அரசு சார்பு திவயின சிங்கள பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சில் ஜெனீவா தூதராக பணியாற்றிவரும் தமரா குணநாயகம் தொடர்பாகத் தற்போது இலங்கை புலனாய்வு பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள திவயின இந்தப் தமிழ் பெண் புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுகிறார் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்ட தினத்தன்று இரவு அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் இணைந்து இந்தப் பெண் அதிகாரிக்கு ஆடம்பர விடுதி ஒன்றில் விருந்துபசாரம் ஒன்றை நடத்தியுள்ளனர் என்றும் அப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்களவர் பக்கம் நின்று தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படும் தமரா குணநாயகம் போன்றவர்களுக்கு சிங்களவர் வழங்கும் பரிசு இதுதான் என்பதை இலங்கை அரசுடன் இருக்கும் சில தமிழர்கள் உணர்ந்து கொள்வதற்கு இது நல்ல பாடமாகும்.

அவர்கள் இதை உணரும் காலம் வெகுதொலைவில் இல்லை என புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# ஜெனீவா பிரேரணையால் சுயதீனத்திற்கு பங்கம் இல்லை

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்

(கொழும்பு)

ஜெனீவா சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் இலங்கையின் சுயாதீனத்திற்கு எதுவித பங்கமும் இல்லை.

பிரேரணையிலுள்ள பாதகமான கருத்துக்களை நீக்கும் வகையில் இந்தியா திருத்தம் கொண்டு வந்தது பாராட்டத்தக்கதாகும் என்று தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜெனீவா சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்ததெனக் கூறப்படும் பிரேரணை நிறைவேறியது குறித்து அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது, ஜெனீவா சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்க பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இலங்கை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலுள்ள சிபாரிசுகளை படிப்படியாக அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதன் பின்னரும் தொடர்ந்தும் எஞ்சிய சிபாரிசுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜெனீவாவில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணையிலிருந்து இலங்கைக்கு பாதகமான சரத்துக்களை இந்தியா திருத்தங்களை முன்வைத்து நீக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டது. இதனால் இலங்கைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் கூறினார். (அ-2)

# தென்கொரியாவில் இலங்கை மக்களுக்கே அதிக வேலைவாய்ப்பு

(கொழும்பு)

தென்கொரியாவிற்கான வெளிநாட்டு ஊழியர்கள் அதிகளவில் இலங்கையில் இருந்தே பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆசியா மற்றும் மத்திய ஆசிய நாடுகள் அனைத்தையும் விட இலங்கையர்களே அதிக வேலை வாய்ப்பினை பெறுவதாக தென்கொரிய தூதுவர் ஜொங்மூன் சொய் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கை உட்பட 15 நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் அங்கு பணியாற்றுகின்றனர்.

தென்கொரியாவில் தற்போது 25 ஆயிரம் இலங்கை ஊழியர்கள் பணிபுரிவதாக தெரிவித்த அவர் அனுபவம் அற்ற ஊழியர்களுக்குக் கூட அடிப்படை வேதனமாக ஆயிரத்து நூறு அமெரிக்க டொலர்களையும் மேலதிக ஊதியத்தைப் பெறுவதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனை

யாழ். கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத் தின் கர வருட தசதின இலட்சார்ச்சனை திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப. 9 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம் பமாகவுள்ளதாக ஆலய பரிபாலன சபையி னர் அறிவித்துள்ளனர்.

உற்சவ காலங்களில் பி.ப.3 மணிக்கு அபிஷேக ஆராதனையும் தொடர்ந்து 5 மணிக்கு அர்ச்சனையும் நடைபெறும். 10 ஆவது நாளாகிய 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு 64 உபசார விசேட பூசை வழிபாடுகளுடன் இலட்சார்ச்சனை நிறைவு பெறும்.

மறுநாள் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேகம் நடை பெறும். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 6 மணிக்கு தெரு வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளதாக அறிவித் துள்ளனர். . (அ)








பூநகரி கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. இப்போட்டியில் கலந்து கொண்ட முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்களின் இசை நாடக நிகழ்வினையும் விருந்தினராகக் கலந்து கொண்ட 661 ஆவது படைப் பிரிவின் தளபதி கேணல் டயாமல் ஜெயசூரியா வெற்றி பெற்ற மாணவிக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

# தமிழீழத்திற்கு அடித்தளமான டெசோ அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

## வீரமணி வலியுறுத்து



**தமிழீழத் தனிநாடு உருவாக தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பாக 1985 இல் செயற்பட்ட டெசோ அமைப்பு மீண்டும் உருவாக்கப்பட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.**

சென்னையில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.வின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் இந்தியா உள்ளிட்ட 24 உலக நாடுகளின் வாக்குகளைப் பெற்று நிறைவேற்றப்பட்டது.

ஒரு வரலாற்றுத் திருப்பம். நல்ல தொடக்கம் உலகறிய செய்த ஜெனீவா தீர்மானம் இலங்கை அரசு நியமித்த விசாரணைக் குழுவே கூட இலங்கையில் நடைபெற்றுள்ள போர்க் குற்றங்களை மறுக்கவில்லை.

என்னென்ன நலத்திட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறது என்றாலும் எந்தவிதமான வளர்ச்சித்திட்டம் நோக்கியும் இலங்கை அரசு பயணிக்கவில்லை என்பது கசப்பான உண்மையே. மனித உரிமைக் குழுவின் கண்காணிப்பில் ஈழ தமிழர்களுக்கான நலத்திட்டங்கள் அரசியல் தீர்வு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றாலும் இலங்கை அரசின் ஒத்துழைப்பு எந்த அளவு இருக்கும் என்பது கேள்விக்குறியே!

இலங்கையின் தலைமை நீதிபதி சரத் என் சில்வா முள்வேலி முகாம்களில் முடக்கப்பட்டுக் கிடந்த பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைப் பார்த்துக் கண்ணீர் விட்டு என்ன சொன்னார்? "நமது நாட்டின் சட்டத்தின் மூலம் தமிழர்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது. தமிழர்களின் துயரங்கள் நீதமன்றத்தின் முன் கொண்டு வரவே படவில்லை. இலங்கையில் சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற இரண்டு இனம் இல்லை. ஒரே இனம்தான் என்று நாம் சொல்லிக் கொண்டு இருப்பதெல்லாம் பச்சைப் பொய்கள். இவைகளை நான் பகிரங்கமாகவே வெளிப்படுத்துகிறேன். இந்நிலை நீடித்தால் விடுதலைப்புலிகளின் போர் மீண்டும் வெடிக்கலாம். இப்படிச் சொல்வதன் மூலம் இலங்கை அதிகாரிகளால் நான் தண்டிக்கப் படலாம். கவலையில்லை" என்றார்.

ஓர் இனத்தையே அடையாளம் தெரியாமல் முற்றிலும் கண்மூடித்தனமாக அழித்து விட்டு கொஞ்சம்கூட மனசாட்சியின்றி சொல்லுகிறார் ராஜபக்ஷ. மனித குல வரலாற்றில் மிகப்பெரிய எண்ணிக்கையில் மக்களைக் காக்கும் மகத்தான நடவடிக்கையை ராஜபக்ஷ மேற்கொண்டாராம்.

இத்தகையவர்களை நம்பி தமிழ் மக்களை மறுபடியும் ஒப்படைக்க முடியுமா? 180 நாட்களில் முகாம்களில் உள்ளவர்களைக் குடியமர்த்துவோம் என்று உத்தரவாதம் கொடுத்தாரே மூன்று ஆண்டுகள் ஆகியும் முடிக்கவில்லையே! இந்த நிலையில் தனியீழம் தவிர வேறு வழியே கிடையாது.

உலக நாடுகள் இலங்கை சிங்கள அரசின் கீழ் தமிழர்கள் நிம்மதியாக வாழ முடியாது என்று உணர வைக்கப்பட்ட இந்தக் கால கட்டத்தில் டெசோ அமைப்பு மீண்டும் தேவைப்படுகிறது.முதலமைச்சர் ஜெயலலிதா கூட ஒரு கட்டத்தில் தனியீழம்தான் தீர்வு என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

முள்வேலிக்குள் ஈழத் தமிழர்கள் வாடி வதங்குகிறார்கள். மன ரீதியாக பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு ஆதரவு தர வேண்டாமா? என அவர் கூறினார்.

(அ-2)

# ஜெனீவா தீர்மானத்திற்கு அரசு உரிய பதில் அளிக்க வேண்டும்

*அல்லது மக்களுக்கே பாதிப்பு என்கிறார் மங்கள*

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அரசாங்கம் உரிய முறையில் பதிலளிக்க தவறினால் அதனால் மக்களே பாதிக்கப்படுவர் எனஐக்கியதேயக்கட்சியின்பாராளுமன்றஉறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜெனீவா தீர்மானம் இந்த அரசாங்கத்திற்கான எச்சரிக்கை சமிக்ஞையாக பலர் கருதுகின்றனர் எனவும் எனினும் அரசாங்கம் பழைய பாதையிலே பயணம் செய்தால் மக்கள் அதன் விளைவுகளை சந்திக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச அழுத்தங்கள் மற்றும் தலையீடுகளுக்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மெய்யாகவே அமுல்படுத்த அரசாங்கம் விரும்பினால் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளிக்கும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# பொருளாதார இலாபங்களுக்காக நாட்டை காட்டிக்கொடுக்கோம்

*அடித்துக்கூறுகிறார் பசில்*

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்கள் இலங்கைக்கு புதிய விடயம் அல்ல எனவும் அவற்றை எதிர் கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது.

பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அமைதி, தேசிய ஒருமைப்பாடு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பிழையற்ற பொருளாதார முகாமைத்துவம் காரணமாக நாட்டிற்கு எதிராக வரும் எந்த சவாலையும் வெற்றி கொள்ளும் இயலுமை இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பசில் ராஜபக்ஷ இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அடிக்கடி பல்வேறு சவால்களை எதிர்நோக்கியது. நாடு தீர்மானகரமான பொருளாதார நிலைமையை எதிர்நோக்கி இருந்த சந்தப்பத்தில் ஜீ.எஸ்.பி.பிளஸ் நிவாரணம் இல்லாமல் செய்யப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் நெருங்கி கொண்டிருந்த நேரத்தில் நாட்டுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் நிபந்தனைகளை விதித்து அவற்றை ஏற்றுக்கொண்டால் ஜீ.எஸ்.பி.பிளஸ் நிவாரணத்தை வழங்குவதாக தெரிவித்தனர். எனினும் பொருளாதார இலாபங்களுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க தயாரில்லை என ஜனாதிபதி தெரிவித்தார். அந்த நிபந்தனைகளை ஜனாதிபதி நிராகரித்திருந்தார். இலங்கையின் ஆடைத் தொழிற்றுறை உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள் வீழ்ச்சியடையும் என சிலர் எண்ணினர். எனினும் அவ்வாறு நடைபெறவில்லை. அந்த நிவாரணமின்றியே ஆடைகள் உட்பட ஏற்றுமதிகள் அதிகரித்தன.

அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு கீழ் மட்டத்தில் இருந்தது. இலங்கை கடன்பெற முயற்சித்த போது கடனை கொடுக்க வேண்டாம் என சில நாடுகள் அழுத்தங்களை கொடுத்தன.

அத்துடன் கடனுதவியை வழங்க கடுமையான நிபந்தனை விதிக்க வேண்டும் என சில நாடுகள் கூறின. எனினும் அந்த சவாலை இலங்கையால் வெற்றி கொள்ள முடிந்தது எனவும் பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கிடைக்கப் பெற்றுள்ள வாகன இலக்க தகடுகள் விபரம்


(மல்லாவி)

முல்லை. மாவட்ட மோட்டார் ஊர்தி பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட புதிய ஊர்திகளில் ஒரு தொகுதி பதிவு இலக்கங்கள் கிடைத்துள்ளதாகவும்முல்லை. மாவட்ட மோட்டார் ஊர்தி பதிவகத்தின் அலுவலர் அறிவித்துள்ளார். உரியவர்கள் வருகை தந்து தமது ஊர்தி இலக்கத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்றுள்ள வாகனங்களின் இலக்கத்தகடுகள் விபரம் வருமாறு, YU-5539, YU-7914, YU-7916, ML-8460, YV-0155, YV-0620, YV-0729, YV-1185, YV-1833, QI-5291, YV-5086, YV-2246, YV-4425, YV-4165.(அ-3-15)








யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் வெற்றி பெற்ற மாணவர் ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)

# ஐ.நா. மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான அமெரிக்காவின் தீர்மானம்



அமெரிக்காவினால் ஜெனீவா மனித உரிமைச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையின் முன்வரைபு 2012 மார்ச் 7 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைச் சபையில் 47 உறுப்பு நாடுகளுக்கும் அதிகாரப்பூர்வமாக வழங்கப்பட்டது.

அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் முன்வரைபு இவ்வாறு அமைந்திருந்தது,


இலங்கையில் நல்லிணக்க மேம்பாடும் பொறுப்புக்கூறுதலும் குறித்து ஐக்கிய நாடுகள் சாசனம், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், மனித உரிமைகளுக்கான அனைத்துலக உடன்படிக்கைகள் மற்றும் பிறதொடர்புடைய விதிகளுக்கு அமைவாகவும், பயங்கரவாதத்திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் சர்வதேச விதிகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தும் உறுப்பு நாடுகளது கடமைக்கு அமைவாகவும் குறிப்பாக பொருத்தமான சர்வதேச மனித உரிமைகள், பாதுகாப்பு, மனிதாபிமான விதிகளுக்கு அமைவாகவும், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள்



## ஐ.நா.வின் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை கவனத்தில் எடுக்கப்படவில்லை

மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் முடிவுகளையும் பரிந்துரைகளையும் மற்றும் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இவ்வறிக்கை வழங்கிய பங்களிப்பை ஏற்றும் சட்டத்திற்கு முரணான மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படும் படுகொலைகள் மற்றும் காணாமற்போதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களையிட்டு பக்கசார்பற்ற விசாரணையை மேற்கொள்ளுதல், வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்குதல், காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பாராபட்சமற்ற பொறிமுறையை உருவாக்குதல், தடுத்துவைத்தல் தொடர்பான கொள்கைகளை மீளாய்வு செய்தல், சுயாதீனமான சிவில் சமூகக் கட்டமைப்புக்களை பலப்படுத்துதல், மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குதல் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணுதல், அனைவரதும் கருத்து வெளிப்பாட்டு உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல், சட்ட ஆட்சிமுறை தொடர்பான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் சார்ந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆக்கபூர்வமான பரிந்துரைகளை வரவேற்றும், சர்வதேச சட்டவிதிகள் தீவிரமாக மீறப்பட்டமை குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதையும் கவனத்திற்கொண்டு,

முதலாவது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதுடன், நீதி, பொறுப்புக்கூறுதல், சகல இலங்கையருக்கும் இடையிலான நல்லிணக்கம் போன்ற



வற்றை உறுதிப்படுத்த, பொருத்தமானதும் நம்பிக்கையானதுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும் சட்டரீதியான கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றவும் இலங்கை அரசைக் கோருதல்.

இரண்டாவது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட மற்றும் தொடர்ந்து எடுக்கப்படவுள்ள விபரங்கள் உள்ளிட்ட, விரிவான செயற்திட்டத்தை விரைந்து முன்வைக்குமாறும், சர்வதேச சட்ட விதிகள் மீறப்பட்டமை குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து கவனம் செலுத்துமாறும் இலங்கை அரசாங்கத்தைக்கோருதல்.

மூன்றாவது, மேற்சொன்ன திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தை வழங்குமாறும், இலங்கை அரசாங்கத்தை, இதனை ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுவதுடன், இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணையகத்தின் 22-வது கூட்டத் தொடரில் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பீக்குமாறும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தை வேண்டுதல்.

.... என்கிற மூன்று அம்சங்களே அமெரிக்காவின் இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைச்சபையின் தீர்மானமுன்வரைவில் அழுத்திக் காட்டப்பட்டதாக அமைந்திருந்தது.

2012 மார்ச் 22 காலையில் ஐ.நா. மனித உரிமைச்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மூன்றாவது அம்சத்தில் மட்டுமே மாற்றம் இருக்கிறது. இந்த மாற்றம் இந்தியாவின் ஆலோசனைக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது. என்பதனை ஐ.நா. மனித உரிமைச்சபையில் வாசிக்கப்பட்ட இந்தியாவின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு தொடர்பான அறிக்கையின் பனுவலை வாசிக்கிற எவரும் அறியமுடியும்.

மாற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூன்றாவது அம்சம் என்னவெனில்,

மேற்சொன்ன திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குரிய ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தை வழங்குமாறும், இலங்கை அரசாங்கத்துடன் ஆலோசித்தும், இசைவுகண்டும் இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணையத்தின் 22-வது கூட்டத்தொடரில் வழங்கப்பட்ட



உதவிகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தை வேண்டுதல்.

தமிழில் இலங்கை அரசாங்கத்தை இதனை ஏற்றுக்கொள்ளுமாறும் வேண்டுவதுடன் and the government of srilanka to accept எனும் வாக்கிய அமைப்பு இலங்கை அரசாங்கத்துடன் ஆலோசித்தும் இசைவுகண்டும் in consultation with the concurrence of, the government of srilanka என மாற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் இந்தியா உட்பட 24 நாடுகளின் ஆதரவுடனும் சீனா, கியூபா, உட்பட 15 நாடுகளின் எதிர்ப்புடனும் 8 நாடுகள் வாக்களிக்காத நிலைமையில் ஜெனீவா ஐ.நா. மனித உரிமைச்சபையில் மார்ச் 22, 2012 காலை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாற்றப்பட்ட வாக்கிய

**நன்றி: இணையம்**

அமைப்பு இலங்கையின் மீதான சர்வதேசக் கண்காணிப்பையும், இலங்கையின் அரசின் மீதான சர்வதேசக்கட்டுப்பாட்டையும் எந்த விதத்திலும் மாற்றியமைத்து விடப் போவதில்லை என்னும் அளவில் இலங்கையின் மூர்க்கத் தனமான தமிழர் இன அழிப்பு கொள்கையை



வைத்துப் பார்க்கையில், இந்த ஐ.நா. தீர்மானம் தமிழர் வரலாற்றில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் இல்லை

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை என்பதை கூற முடியும் என பதில் ஊடக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வா பத்திரிக்கையாளர்களின் கை, கால்களை முறிப்பேன் என விடுத்த மிரட்டலானது. அரசின் கொள்கையை பிரதிபலிக்கவில்லை என்று பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்ன தெரிவித்துள்ளார்.

எனினும் சில பத்திரிகை நிருபர்களின் புகைப்படங்கள் தொலைக்காட்சி மூலம் காட்டப்பட்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது குறித்து தனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதாகவும் உடனே தான் அதை நிறுத்திவிட்டதாகவும் இலங்கையில் உண்மையில் ஊடகவியலாளர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பேரவையில் இலங்கைக்கெதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே மேர்வின் சில்வா இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்கள் சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களின் கை, கால்களை உடைப்பேன் என்று எச்சரித்திருந்தார்.

சுனந்த தேசப்பிரிய நிமால் பெர்னாண்டோ பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோரைப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லி அவர் இந்த அச்சுறுத்தலை விடுத்தார்.

இதேவேளை அமைச்சர் மேர்வின் சில்வாவின் கருத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (அ-2)

# இராஜேஸ்வரி சண்முகத்தின் இழப்பு ஊடகத்துறைக்கு பேரிழப்பு

## மட்டு.தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

(கொழும்பு)

இலங்கையில் புகழ்பெற்ற வானொலி அறிவிப்பாளரும் நாடகக் கலைஞருமான இராஜேஸ்வரி சண்முகத்தின் இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு பேரிழப்பாகுமென மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இராஜேஸ்வரி சண்முகம் இலங்கையில் புகழ்பெற்ற வானொலி அறிவிப்பாளரும் நாடகக் கலைஞரும் ஆவார்.

1950 களில் இலங்கை வானொலியில் சானா சண்முகநாதன் நாடகத் தயாரிப்பாளராக இருந்தபொழுது வானொலி நாடகங்களில் நடிப்பதற்காக இவர் வானொலித்துறைக்கு வந்து தொடர்ந்து நீண்ட காலமாக நடித்தவர். ஆரம்பத்தில் தற்காலிக அறிவிப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் தமிழ் வர்த்தக சேவையில் நிரந்தர அறிவிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இன்று ஊடகத்துறையில் உள்ளே நுழையும் இளம் சந்ததியினருக்கு சிறந்தமுறையில் வழிகாட்டல்களையும் அவர் மேற்கொண்டு வந்ததுடன் அவர்கள் அதில் பிரகாசிக்கவும் பின்புலமாக இருந்து செயற்பட்டு வந்தார்.

இவ்வாறான நிலையில் அவரது இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் இழப்பாகவே மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கருதுகின்றது. இந்த நிலையில் அவரது பிரிவால் துயறுரும் அவரது குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். (அ-2)

# இணையத்தள பதிவு தொடர்பான 50 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## ஊடக அமைச்சின் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இணையத்தள பதிவு தொடர்பான 50 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

100 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் இதில் 50 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ பி.கனேகல தெரிவித்துள்ளார்.

உரிய தகவல்களை வழங்காத மற்றும் போலியான தகவல்களை வழங்கிய இணைய தளங்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இணைய ஆசிரியர், ஊடகவியலாளர்கள் பற்றிய தரவுகள் மற்றும் ஏனைய விபரங்களை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரியிருந்தது.

செய்தி இணைய தளங்கள் பக்கச்சார்பாக செயற்படக் கூடாது எனவும் செய்தித் தாள்களில் போன்றே பதிலளிக்கும் உரிமையை இணைய செய்தி ஊடகங்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனிப்பட்ட நபர்கள் மீது சேறு பூசும் நடவடிக்கைகளில் ஊடகங்கள் ஈடுபடக் கூடாது என ஊடக அமைச்சும் கோரிக்கை விடுத்துள்ளது. (அ-2)




★ *1199*-இங்கிலாந்து மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும்போது படுகாயமடைந்தான். 11 நாட்களின் பின்னர் இவன் இறந்தான்.

★ *1431*-பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் முன் விசாரணைகள் ஆரம்பமானது.

★ *1552*-குரு அமர்தாஸ் சீக்கியரின் மூன்றாவது மதகுருவானார்.

★ *1812*-வெனிசுவேலாவின் கரக்காஸ் நகர் நிலநடுக்கத்தில் அழிந்தது.

★ *1871*-இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக்கணக் கெடுப்பு இடம்பெற்றது. 2, 405, 287 பேர் பதிவாகினர்.

★ *1872*-கலிபோர்னியாவில் லோன்பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.

★ *1917*-முதலாம் உலகப் போர்: காசாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்ற சுமார் 17 ஆயிரம் துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.

★ *1934*-ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ *1942*-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் முதற்தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாயினர்.

★ *1945*-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானுடனான இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.

★ *1953*-ஜொனாஸ் சால்க் தனது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.

★ *1958*-ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.

★ *1971*-கிழக்கு பாகிஸ்தான் பாகிஸ்தானிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. வங்காளதேச விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ *1979*-இஸ்ரேல் எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷிங்டனில் கைச்சாத்தானது.

★ *1997*-சுவர்க்கத்தின் வாயில் என்ற மதக் குழுவில் தற்கொலை செய்து கொண்ட 39 பேரின் உடல்கள் கலிபோர்னியாவில் கண்டெடுக்கப்பட்டன.

★ *1998*-அல்ஜீரியாவில் 2 அகவைக் குட்பட்ட 32 குழந்தைகள் உட்பட 52 பேர் கத்திகளாலும் வாள்களாலும் வெட்டப்பட்டுப் உயிரிழந்தனர்.

★ *2000*-விளாடிமீர் பூட்டின் ரஷ்யாவின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

★ *2006*-மியான்மாரின் புதிய தலைநகராக நாய்பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.

★ *2006*-முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.

**பிறப்புக்கள்**

★ *1874*-றொபேட் ஃபுறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர்(இ.1963)

★ *1913*-பால் ஏர்டோசு, அங்கேரிய கணிதவியலாளர் (இ.1996)

★ *1916*-கிறிஸ்டியன் ஆன்பின்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1995)

★ *1938*-அந்தனி லெகெட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ *1940*-நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி

★ *1951*-கார்ல் வைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ *1962*-ஜான் ஸ்டாக்டன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்


**இறப்புக்கள்**

★ *1827*-லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கத்திய செவ்விசை இயற்றுநர் (பி.1770)

★ *1892*-வால்ட் விட்மான் அமெரிக்கக் கவிஞர் (பி.1819)

**சிறப்பு நாள்**

★ வங்களாதேசம் (விடுதலை தினம் (1971)



★ *1941*-படிவளர்ச்சி உயிரியலாளர் ரிச்சர்ட் டாக்கின்ஸின் பிறந்த தினம்.

# அதிசய உலகம்...



## 12 மணித்தியாலங்களில் 14 உலக சாதனைகளை நிகழ்த்திய வீரர்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் சகலதுறை வீரருமான அன்ட்ரூ பிளின்டொப் 14 வித்தியாசமான உலக சாதனைகளைப் படைத்துள்ளார். அறக்கட்டளை ஒன்றிற்காக அவர் இந்த சாதனைகளைப் படைத்துள்ளார். இவர் 12 மணித்தியாலங்களுக்குள் 14 சாதனைகளை படைத்துள்ளமை சிறப்பானதாகும்.

அவரது சாதனைகளுள் சூடான சொக்லேட் பானத்தை விரைவாக அருந்துவது, அதிக பட்டாணிகளை கொக்ரெய்ல் தடியைக் கொண்டு 30 செக்கன்களுக்குள் உண்பது, ஒரு மணித்தியாலத்தில் அதிக பேஸ்புக் லைக்குகளை செய்வது ஆகியன உள்ளடங்குகின்றன.

சூடான சொக்லேட் பானத்தை 5.45 செக்கன்களில் அருந்திய அன்ரூட் பிளின்டொப் ஒரு மணித்தியாலத்தில் 52719 லைக்குகளை செய்தும் 38பட்டாணிகளை உண்டும் கின்னஸ் சாதனை படைத்தார்.

இவை தவிர 30 செக்கன்களில் அதிக முத்தங்கள் -40 முத்தங்கள், விசைப்படகில் 100 மீற்றரை வேமாக கடந்தமை-1 நிமிடம்,58.62 செக்கன்கள் (முன்னாள் வீரர் ஸ்ரிவ் ஹார்மிசனுடன் இணைந்து)அதிகம் பேர் இணைந்து பார்ட்டி வெடிப்பான்களை வெடித்தமை-420 பேர் ,20 பேருக்கு விரைவாக ஐந்து போடுதல் (ஹை பைஃவ்)-6.53 செக்கன்கள்ஒரு நிமிடத்தில் அதிக கிரிக்கெட் பந்துகளைச் சந்தித்தமை--19 பந்து வீச்சுக்கள்,காரில் வேமாக மூன்று புள்ளித் திருப்பத்தை ஏற்படுத்தியமை (14.01 செக்கன்கள்) போன்ற சாதனைகளையும் அவர் படைத்தார்.

## உலகிலேயே மிகச்சிறிய அளவில் வடிவமைக்கப்பட்ட சலவை இயந்திரம்



நம் ஆடைகளை சுத்தம் செய்வதை இலகுவாக்குவதற்காக உருவாக்கப்பட்ட சலவை இயந்திரம் தற்போது மிகச்சிறிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது பை வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

108 கிராம் நிறையை கொண்டுள்ள இந்த சலவைப் பையானது இடத்திற்கு இடம் எடுத்துச் செல்ல முடியும் என்பது விசேட அம்சமாகும்.


இதில் ஒரே தடவையில் 2 தொடக்கம் 3 லீற்றர் வரையிலான நீரை பயன்படுத்த முடிவதுடன் சம்போ, சலவை தூள்கள் போன்றவற்றை பயன்படுத்தி 20-40 நொடிகளில் சலவை செய்ய முடியும். இவை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் சந்தைப்படுத்தப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 1,857 ஊசிகளைக் கொண்டு உலக சாதனை படைத்த திருமண ஆடை



பெண்களுக்கான திருமண ஆடையின் பின்னால் தொங்கும் பகுதியை மிகவும் நீளமுள்ளதாக அமைத்து அணிவதிலும் கின்னஸ் சாதனை நடந்து இருக்கிறது. இதில் முந்திய சாதனை 2488 மீற்றார் நீளமுள்ளதாக இருந்தது. இந்த சாதனையை ருமேனிய நாட்டில் புசாரெஸ்ட் நகரில் நடந்த நிகழ்ச்சியில் எம்மா என்ற 17 வயது மொடல் பெண் முறியடித்தார். மேலும் அவர் 2750 மீற்றர் நீளமுள்ள திருமண ஆடையை அணிந்து சாதனை புரிந்தார். இந்த ஆடை அமைக்க 100 நாட்கள் ஆனது . இதற்கு 4700 மீற்றர் துணியும் 1857 ஊசிகளும் பயன்படுத்தப்பட்டன.


## உலகிலேயே மிகப் பெரிய சாய்வு நாற்காலி



கோடை காலத்தினை முன்னிட்டு பிரிட்டனில் Bournemouth கடற்கரையில் உலகின் மிகப்பெரிய சாய்வு நாற்காலி சுற்றுலா பயணிகளின் வசதிக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த நாற்காலி 8.5 மீற்றர் உயரமும் 5.5 மீற்றர் அகலத்தினைக் கொண்டும் இரண்டடுக்கு பேருந்தின் உயரத்தினை காட்டிலும் உயரமாகும்.

மேலும் 35 தொன் எடையுடைய கிரேன் மூலமாக இந்த சாய்வு நாற்காலியை இக்கடற்கரைக்கு கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பங்கிஜம்பில் துணிச்சலுடன் பற்கேற்ற பக்கவாதநோயுடைய அபூர்வ பெண்



Bungee Jmp எனப்படும் துணிச்சல் மிகுந்த திரில்லர் விளையாட்டில் christine Rougoor என்ற (வயது24 ) பக்கவாதத்துக்கு உள்ளாகிய பெண் பங்கேற்றுள்ளார். இந்த சவாலில் பங்கேற்றதன் மூலம் வாழ்நாளில் நான் நினைத்திருந்த கனவு ஒன்று நிறைவேறியுள்ள்தாக குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

வீல் செயரில் இருந்தே இந்தப் பெண் பங்கேற்ற காட்சிகள் வீடியோப் படமாக்கப்பட்டன. திரில்லர் விளையாட்டில் பங்கேற்ற குறித்த பெண் கருத்து தெரிவிக்கையில்,

எந்தக் கவலைகளும் இல்லாது சில நிமிடங்கள் என்னால் சுதந்திரத்தை உணர முடிந்தது. நான் எங்கோ போய் திரும்ப வந்ததாக உணர்கிறேன்.

## தன்னம்பிக்கையுடைய மூன்று கால்களுடைய நாய்



பொதுவாக ஏதாவது குறைபாடு உள்ள உயிரினங்களுக்கு ஏதாவது விசேட சிறப்பியல்பினைக் கொண்டு மனிதர்களை வியப்பில் ஆழத்துகின்றன.

அதேபோல நாய் ஒன்று விபத்தில் தனது ஒரு காலை இழந்துள்ள போதிலும் சாகசங்களை மேற்கொண்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி வருகின்றது.

இந்த மூன்று கால்களை உடைய நாய்க்கு விசேட பயிற்சியாளர் ஒருவர் பயிற்சிகளை வழங்குவதன் அடிப்படையில் இவ்வாறு வியக்க வைக்கும் வகையில் செயற்பட முடிகின்றது. இந்த அதிசய நாயை முன்னுதாரணமாக எடுப்பதன் மூலம் நாமும் சரியான பயிற்சிகளை அடிப்படையில் சாதிக்க முடியும்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மீண்டும் பேச்சு அவசியம்

## சுரேஷ் எம்.பி.கூறுகிறார்



(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் காண்பது தொடர்பில் அரசாங்கத்துடன் இரு தரப்பு பேச்சவார்த்தை நடத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையில் நடத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகள் கடந்த ஜனவரி மாதம் இடைநிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என கூட்டமைப்பு அறிவித்ததை தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டன. அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றை நோக்கி நகர்வதற்கு இரு தரப்பு பேச்சுவார்த்தை மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் சில முக்கியமான விடயங்கள் பற்றி இணக்கப்பாடு எட்டப்படும் வரையில் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்த தயார் என்றால் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# இறால் பிடிப்பதற்கான அனுமதி பிற்போடப்பட்டது

(ஆணையிறவு)

சுண்டிக்குளம் கடற்பரப்பில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதியிலிருந்து இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் எதிர்வரும் 5 ஆம் திகதி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான்ஆலய ஆண்டுற்சவ பொங்கல் நடைபெறவுள்ளதால் அதனை அண்டிய காலப்பகுதியில் இறால் பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எனவே,கடந்த 23 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது இதற்கான அனுமதியானது பிற்போடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கரைச்சி மாவட்ட பிரதித்திட்ட பணிப்பாளர், நெக்டா நிறுவனத்தின் மாவட்ட உத்தியோகத்தர், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச பொது முகாமையாளர், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மற்றும் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு இத்தீர்மானத்தை எடுத்துள்னர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-7-264)

# ஐ.நா.மனித உரிமைப் பேரவை அமர்வுகள் குறித்து பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் குறித்து பாராளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்களை தீட்டி வருவதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மனித உரிமைப் பேரவை அமர்வுகள் தொடர்பில் பதில் வெளிவிவகார அமைச்சர் டி.யூ.குணசேகர அண்மையில் பாராளுமன்றில் ஆற்றிய உரையைத் தொடர்ந்து அனுரகுமார திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதேவேளை, முழு நாளும் விவாதம் நடத்துவது தொடர்பில் கட்சீத் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்க முடியும் என சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (அ-2)

# பாரிய அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் கைவிட வேண்டும்

## பொருளியல் நிபுணர் நிமால் சந்தரட்ண கூறுகிறார்

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமாயின் பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் கைவிட வேண்டுமென பொருளியல் நிபுணர் கலாநிதி நிமால் சந்தரட்ண தெரிவித்துள்ளார்.

அதேவேளை மக்களுக்கு உடனடி பொருளாதார நலன்கள் கிட்டக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.

அரசாங்கத்தின் சில அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் பல ஆண்டுகளின் பின்னரே நன்மைகள் கிடைக்கும் என கலாநிதி நிமால் சந்தரட்ண தெரிவித்துள்ளார். (அ-2)



மாத்தறைப் பிரதேச மூவின விவசாய மக்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண ஆரம்பித்துள்ளார். இதற்கமைய அதுருலிய பிரதேச செயலாளர் பிரிவில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சமாதி சமூக அபிவிருத்தி சங்கத்தின் பணிப்பாளருமான புத்திக பத்திரண விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# கல்மடுக்குளத்திட்டத்தின் மூலம் சிறுபோகச் செய்கை நடவடிக்கை

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

கிளிநொச்சி கல்மடு குளத்தின் வரலாற்றில் முதல் முறையாக தர்மபுரம், நாகேந்திரபுரம், புளியம்பொக்கனை கிராம விவசாயிகள் சிறுபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி.பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புளியம்பொக்கனை கமநல சேவைகள் நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கல்மடு குளத்தின் கீழான சிறுபோக நீர் விநியோகத்திட்ட கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த காலத்தில் உடைக்கப்பட்ட கல்மடுகுளம் மீள புனரமைக்கப்பட்ட பின்பு நீர் கொள்ளளவு மட்டம் 21 அடியிலிருந்து 24 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கனவே எம்மால் உறுதியளிக்கப்பட்டதற்கு அமைவாகவும் அரசின் அறிவிப்புக்கு அமைவாகவும் இம்முறையிலிருந்து மேற்படி கிராம மக்களும் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இம்முறை கல்மடு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையின் பரப்பளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எந்த பிரதேச விவசாயிகளும் பாதிக்கப்படாத வகையில் புதிய பிரதேசங்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. எனவே, முப்பது வருடத்திற்கு மேலான மேற்படி விவசாயிகளின் கோரிக்கை இம்முறை நிறைவேற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த தடவை கல்மடு குளத்தின் கீழ் கண்டாவளை 350 ஏக்கர், கல்மடு 90 ஏக்கர், தர்மபுரம் 80 ஏக்கர், நாகேந்திரபுரம் 40 ஏக்கர், புளியம்பொக்கனை 75 ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




சர்வதேச மகளிர் தினமான இம்மாதம் 8 ஆம் திகதி அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முதற்பெண்மணி சிராந்தி ராஜபக்ஷ அவர்களின் முதன்மையில் நடைபெற்ற சௌபாக்கியத்தை **தேடிச்செல்லும் பயணத்தில் முன்னோடியான இலங்கை பெண்களுக்கான தேசிய மரியாதை** என்னும் விழாவில் பங்குபற்றி யாழ்.மாவட்டத்தில் சிறந்த மகளிர் குழுவிற்கான **சான்றிதழ்** மற்றும் பணப் பரிசினை பெற்று வந்ததுடன், 23.03.2012 நடைபெற்ற யாழ். பிரதேச செயலக மகளிர் தின நிகழ்வில் சிறந்த மகளிர் குழுவிற்கான சான்றிதழ் மற்றும் சிறந்த பெண்ணை தெரிவு செய்தல் போட்டி யில் 2 ஆம் இடத்தை பெற்றமைக்கான சான்றிதழ் மற்றும் பரிசு பெற்ற எமது J/ 80 பெரியகடை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவியும், யாழ்.பிரதேச கிராம மாதர் சங்கங்களின் சமாச செயலாளரும், சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பினதும் அதன் மகளிர் அமைப்பினதும் யாழ். மாவட்ட உறுப்பினரும், J/80 பெரியகடை பொலிஸ் பொதுமக்கள் கிராமிய சிவில் பாதுகாப்பு குழுவின் உப செயலாளருமான

**திருமதி சசிரேகா வரதராஜனை**


பாராட்டி வாழ்த்துகின்றோம்

(8007)

**J/80 பெரியகடை மாதர் அபிவிருத்தி சங்க அங்கத்தவர்களும்**
**பெரியகடை வாழ் மக்களும்.**

# தமிழர்களுக்கு அரசியல் தீர்வை வலியுறுத்துவதாக ஜெனீவா தீர்மானத்தை இந்தியா கருதவேண்டும்

## டி.ராஜா தெரிவிப்பு



(புதுடில்லி)

**இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க அந்நாட்டு அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு கிடைத்த வாய்ப்பாக ஜெனீவா தீர்மானத்தை இந்தியா கருத வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி. ராஜா கூறினார்.**

இது தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் அவர் அளித்த பேட்டியில்,

இலங்கையில் நடைபெற்ற போரின்போது அப்பாவிகள் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களை உறுதிப்படுத்தும் விதமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு உலக நாடுகள் வாக்களித்துள்ளன.

இந்த நிகழ்வின் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கையின் முகத்திரை கிழிக்கப்பட்டுவிட்டது. உலகின் பல நாடுகளில் உள்நாட்டு சண்டைகள், மோதல் நடைபெறுகின்றன. ஆனால் திட்டமிட்டு ஒரு இனத்தையே கொல்லும் நோக்குடன் இலங்கையில் உள்நாட்டு போர் நடந்தது.

பாலஸ்தீனம், லிபியா போன்ற நாடுகளில் மோதல், சண்டைகளில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் இலங்கைப்போரில் விடுதலைப்புலிகள் உட்பட 40 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையே நடந்த சண்டையில் எட்டு ஆயிரம் அப்பாவிகள் கொல்லப்பட்டதாக இலங்கை அரசே ஒப்புக்கொள்கின்றது.

இதை இனப்படுகொலை என்றல்லாமல் வேறு என்ன என்று கூறுவது?

இலங்கையில் நடந்த அனைத்து சம்பவங்களையும் நன்கு அறிந்த நாடு இந்தியாவாகத்தான் இருக்க முடியும்.

பொறுப்பை இந்தியா தட்டிக் கழிக்கக்கூடாது. ஆனால் இந்த விவகாரத்தில் இந்தியா வெறும் வாக்குப் போடும் நாடாக விளங்கியது வருத்தத்திற்குரியது.

அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா கொண்டு வந்திருந்தால் சர்வதேச அரங்கில் நமது நாட்டின் கௌரவம் உயர்ந்திருக்கும்.

இனப்படுகொலைக்கு காரணமானவர்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். குறிப்பிட்ட கால வரையறைக்குள் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வை பெற்றுத்தர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தன் மீது சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பு அதிகரித்து வருவதை இலங்கை அரசு உணர வேண்டும்.

ஜெனீவா தீர்மானத்தை தனக்கு விடுவிக்கப்பட்ட எச்சரிக்கையாக கருதி ஆக்கபூர்வ நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# மெக்சிக்கோவிற்கு முதற்தடவையாக விஜயம் செய்த போப்பாண்டவர்

(சிலான்)

லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிக்கோ போப் 16 ஆம் பெனடிக் புனிதப் பயணம் ஒன்றை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டுள்ளார்.

மெக்சிக்கோவிற்கு இப்போதுதான் அவர் முதல் தடவையாக வந்துள்ளார். சிலாவ் விமான நிலையத்தில் அவருக்கு அந்நாட்டு அரசு சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மெக்சிக்கோவின் ஜனாதிபதி ஃபெலிப்கால்டேரோன், அவரது மனைவி மார்கரிடா ஜாவலா இருவரும் விமான நிலையத்துக்கே வந்து போப்பாண்டவரை வரவேற்றனர்.

போப்பாண்டவர் விமானத்தை விட்டு இறங்கி நடந்து வந்தபோது சிலர் வத்திக்கான் நாட்டு கொடியை அசைத்தும் வரவேற்பு அளித்தனர். மெக்சிக்கோ மண்ணில் அடியெடுத்து வைத்துள்ள போப்பாண்டவரே இப்போது நீங்களும் மெக்சிக்கோ மக்களில் ஒருவர் என்று மக்கள் குரல் எழுப்பினர்.

இதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் உரையாற்றிய போப்பாண்டவர்,

மெக்சிக்கோவில் 2006 இல் அரசியல் குழப்பம் ஏற்பட்டதில் இருந்து போதைப் பொருள் கடத்தல் அதிகரித்து விட்டது. இதனால் ஏற்பட்டுள்ள வன்முறை சம்பவங்களால் இதுவரை சுமார் 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இது வருத்தமளிக்கின்றது என்றார். (அ-2)



## சிறைச்சாலை ஜன்னலை உடைத்து 19 தீவிரவாதிகள் தப்பியோட்டம்

ஈராக்கில் உள்ள கிர்குக் சிறைச்சாலையில் ஜன்னலை உடைத்து அதன் வழியாக 19 தீவிரவாதிகள் தப்பி சென்றனர்.

ஈராக்கின் கிர்குக் நகரில் உள்ள சிறைச்சாலையில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வரவுள்ள நிலையில் சிறைச்சாலையில் உள்ள வெண்டிலெட்டர் ஜன்னலை உடைத்து அதன் வழியாக 19 தீவிரவாதிகள் தப்பி சென்றுள்ளனர். இந்நாட்டின் சிறைச்சாலைகளை உடைத்து கைதிகள் தப்பிச் செல்வது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. (அ-2)

# நாகை கடலில் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை அடாவடித்தனம்

(நாகை)

நாகையில் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடித்து உதைத்து படகினை சேதப்படுத்தியுள்ளதாக நேற்று கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாகை துறை முகப்பகுதியைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கடந்த 20 ஆம் திகதி கடலுக்கு விசைப்படகில் சென்றனர். இவர்கள் 35 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர், விசைப்படகினை மறித்து அதில் நாட்டப்பட்டிருந்த இந்திய தேசிய கொடியை கிழித்தனர்.

பின்னர் மீனவர்கள் கொண்டு வந்த உணவுப் பொருட்கள் மற்றும் உடமைகளை பறித்து கடலில் வீசி எறிந்ததுடன் மீன்பிடி வலைகளை அறுத்தனர்.

தமிழக மீனவர்களை பூட்ஸ் காலால் சரமாரியாக மிதித்து தாக்கியுள்ளனர். இதில் மூன்று மீனவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது என நேற்று அதிகாலை கரைக்குத் திரும்பிய ஆறு மீனவர்களும் கடலோர பொலிசாரிடம் மேற்கண்ட தகவல்களை தெரிவித்துள்ளனர். (அ-2)

## வடகொரிய நாடாளுமன்ற கூட்டம் ஏப்ரலில்

வடகொரியா ஜனாதிபதியாக கிம் ஜாங் உன் பதவி ஏற்றதன் பின்னர் சில மாற்றங்களை நிகழ்த்துவார் என்று அந்நாட்டு மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஏப்ரல் மாதம் மத்தியில் ரொக்கெட் ஏவப்படும் என அறிவித்தார்.

இது தென்கொரியா, ஜப்பான் நாடுகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் வடகொரியா பாராளுமன்றத்தில் கூட்டம் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி கூடப்படும் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றபின்னர்நடைபெறும்முதல் கூட்டம் இதுவாகும். (அ-2)

# 300 வருடம் பழைமை வாய்ந்த தங்கப்புதையல் கண்டுபிடிப்பு

கர்நாடக மாநிலத்தில் 300 வருட பழமையான தங்கப் புதையல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலம் பெல்லாரியில் உள்ள சந்தூர் நகரம் அருகில் ஒரு வீட்டின் வடிகால் வேலை தொடர்பாக தோண்டப்பட்ட போது சிவபெருமான், அவருடைய மனைவி பார்வதி மற்றும் நிலவு ஆகியவைகளை சித்தரிப்பதுபோல 300 வருட பழைமையான 200 இற்கும் மேற்பட்ட தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.

மேலும் அந்த நாணயத்தில் தேவனாகிரியின் சுருக்கமான விபரங்களும் இடம்பெற்றிருந்தது. கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் 213 நாணயங்கள் வீட்டின் உரிமையாளருக்கு கிடைத்ததாகவும் இந்த தகவல் பொலிஸாருக்கு தெரிந்ததும் அவற்றை கைப்பற்றியதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாணயங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ள தொல்பொருள் அதிகாரிகள் ஹம்பியிலிருந்து சத்தூருக்கு வருவதாக எதிர்பார்க்கப்படுகின்றது என்று கர்நாடக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# ஐரோப்பிய நாடுகளுக்கு செல்ல தடை விதிப்பு

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக கிளர்ச்சி நடந்து வருகின்றது. இதற்கிடையில் சிரியாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அடுத்த கட்ட அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. ஆசாத்தின் மனைவி அஸ்மா மற்றும் அவரது குடும்பத்தினர் வங்கி பணத்தை முடக்கின.

மேலும் இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்யத்தடை விதித்துள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மந்திரிகள் கூட்டத்தில் இந்த முடிபு எடுக்கப்பட்டதாக புருசெல்ஸ் தூதர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா வரவேற்பு தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விக்டோரியா நூலண்ட் கூறுகையில்,

ஆசாத்தின் ஆட்சிக்கு இதுமேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று கூறினார். இதற்கிடையில் சிரியா பிரச்சினை பற்றி பேச்சு நடத்த சிறப்பு தூதுவரான கோபி அனான் விரைவில் ரஷ்யா, சீன நாடுகளுக்கு செல்ல இருக்கின்றார். (அ-2)

# தீவிரவாத எதிரொலி; பாடசாலைகளுக்கு மூடுவிழா

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் மிரட்டல் காரணமாக சுமார் 500 இற்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டதாக அந்நாட்டின் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் தெரிவித்துள்ளார்.

மேலும் தலிபான்கள், அல்கொய்தா உட்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புக்கள் மிரட்டல் காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் அச்சத்தில் ஆழ்ந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற செயல்களை உடனடியாக தலிபான்கள் நிறுத்த வேண்டும் எனவும் இது ஆப்கான் மற்றும் அந்நாட்டு மக்களின் எதிர்காலத்தை பாழ்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)



தென்கொரிய, சியோலில் நடக்கவுள்ள அணுசக்தி மாநாட்டுக்கு வடகொரியாவின் தலைநகர் கிம் ஜாங்க் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டக்காரர்கள் வடகொரியாவின் தேசியக்கொடியை எரித்ததைப் படத்தில் காணலாம்.

மனிதனே! உன் மனதில் தோன்றும் எண்ணத்தை உடனே சொல்லிவிடு. இல்லையென்றால் சில நாட்கள் கழித்து; உனது கருத்தை நீ வேறு ஒருவன் வாயிலாக கைகட்டி நின்று கேட்க வேண்டிவரும். -எட்வர்ட் யங்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# காளை மாட்டின் உயிரை காப்பாற்றியது போல...

நேற்றைய தினம் வெட்டப்படவிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான காளை மாட்டை வெட்டுவதற்குத் தடை பிறப்பிக்கப்பட்ட செய்தி அறிந்து ஆனந்தப்பட்ட மக்கள் ஏராளம்.

அவர்கள் தங்கள் மனத்திருப்தியைத் தொலைபேசிகளில் தெரிவித்தபோது—எங்களிடம் இருக்கக் கூடிய ஜீவகாருண்யத்தை நினைத்தபோது, ஆனந்தக் கண்ணீர் பெருகிக் கொண்டது.

நேற்றுக் காலைவேளை அம்மையார் ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

காளை மாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இரவு பூராகவும் தான் பிரார்த்தனை செய்ததாகக் கூறினார்.

காளை மாடு காப்பற்றப்பட்டுவிட்ட செய்தி அறிந்த பின்னரே தான் நிம்மதி அடைந்ததாகக் கூறினார்.

என்னே கருணை! என்று நினைத்தபோது, நெஞ்சம் நெக்குருகிக் கொண்டது.

வீட்டிற்கு வெளியில் தொட்டி கட்டி, அந்தத் தொட்டியில் தண்ணீர் இறைத்து தெருவால் போகின்ற மாடுகள் தாகம் போக்க வழிசெய்த நம்மவர்கள், தண்ணீர் குடித்த மாடுகள் வாயைத் துடைப்பதற்காகத் தொட்டிக்கு அருகில் பெரியதொரு கல்லையும் வைத்தனர்.

இத்தகைய உயரிய இந்துப் பண்பாட்டின் உரிமைக்காரர்கள் நாம் என்று நினைக்கும் போது மார்தட்ட வேண்டும்போல் இருக்கின்றது.

காளை மாடு வெட்டப்படுவதான தகவலை அறிந்தவுடன் எங்கள் சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள், ஜீவகாருண்யம் மிக்கவர்கள் ஒன்றாகக் குரல் கொடுத்தனர்.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட யாழ் அரச அதிபர் அங்கிருந்தவாறே காளை மாட்டைக் காப்பாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டதை அறிந்தபோது,

மாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று யாழ் மாநகர முதல்வர் உறுதியாகத் தெரிவித்ததை தெரிந்து கொண்டபோது, முஸ்லிம் மக்கள் அதற்கு மதிப்பளித்தபோது, எல்லா விடயத்திலும் இப்படி ஒரு ஒற்றுமை; ஒருமைப்பாடு; ஒத்த குரல் இருந்தால் எங்கள் மண்ணில் எந்தக் குறைக்கும் இடமில்லை என்று எண்ணத் தோன்றியது.

ஆம், காளை மாட்டின் உயிரைக் காப்பாற்றுவதில் எங்ஙனம் ஒற்றுமைப்பட்டோமோ அது போல் எங்கள் இளம் பிள்ளைகள் மத்தியில் கலாசார கட்டுமானத்தைக் கட்டியெழுப்ப நாங்கள் அனைவரும் ஒன்று திரளவேண்டும்.

இத்தகைய ஒழுக்கக் கட்டுமானங்களை பிள்ளைகளின் உள்ளங்களில் வைரமாக கட்டி எழுப்பினால், யாழ்ப்பாணத்து மண்ணில் வாழ வேண்டும் என்பதற்காக பலர் வெளிநாட்டு வாழ்க்கையை தூக்கியெறிந்து விட்டு இங்கு வருவர். இது சத்தியம். நடக்குமா?

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது மிகவும் முட்டாள்தனமானது -தயாசிறி



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் தொடர்பாக மக்களின் ஆணையை பெற்றுக்கொள்வதற்கு புதிய தேர்தலை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு கோரிக்கை முட்டாள்தனமானது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டம் மிக முட்டாள்தனமானது. அத்துடன் இது எமது பிரச்சினைகளைத் தீர்க்காது. அதேவேளை காட்டுச்சட்டத்தை சர்வதேச சமூகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக பயன்படுத்த முடியாது அற்கு சர்வதேச சமூகம் பயப்படாது.

முதலாவதாக இந்த அரசாங்கம் எவ்வாறு தொடர்ச்சியாக தேர்தல்களில் வெற்றிபெற்றது என்பதை நாம் அறிவோம். அவர்கள் அனைத்தையும் சட்ட விரோதமாக செய்து மக்களின் உண்மையான விருப்பத்தை அகற்றினர். இரண்டாவதாக, இத்தீர்மானம் குறித்த விடயங்களை புதிய வாக்கெடுப்பு எவ்வாறு தீர்க்கும்? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பெருமைமிக்க நாடாகிய நாம் அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுகளின் காரணமாக முதல் தடவையாக, சர்வதேச சக்திகளிடமிருந்து அறிவுத்தல்களை பெற நேரிட்டுள்ளது. மக்களை கிளர்ந்தெழச் செய்து சர்வதேச சதி என்றதிரைக்குப் பின்னால் மறைந்து கொள்கிறது. இது வாக்களிப்பில் உதவாது .இப்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இனி இதுபோன்ற முட்டாள்தனமான பேச்சுகளை பேசுவதற்குப் பதிலாக இதுவரை கூறப்பட்டுவந்ததை பின்பற்ற வேண்டும்,


சர்வதேச சமூகமானது இந்நாட்டிற்கு எதிரானது அல்ல எனவும் தற்போதைய அரசாங்கத்திற்கே அது எதிராகவுள்ளதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச சமூகத்தை தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவது, அரசாங்கத்தின் அமைச்சரால் கூட இன்றுவரை மேற்கொள்ளப்படும் மிரட்டல்கள் அச்சுறுத்தல்கள் என்பன நிறுத்தப்பட வேண்டும். இது குறைந்தபட்சம் எமது நாட்டின் மீதான நம்பகத்தன்மைக்கு உதவும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்போது தேர்தல் நடந்து புதிய ஆணையை அரசாங்கம் பெற்றால்கூட சர்வதேச சமூகத்தின் மனதில் அது மாற்றத்தை ஏற்படுத்தாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8;11)

# சிங்கள மக்கள் அனுபவிக்கும் சலுகைகளை தமிழ்மக்களும் விரைவில் அனுபவிப்பர்

## அமைச்சர் வாசன் தெரிவிப்பு



(வேலூர்)

இலங்கையில் சிங்களவர்கள் என்னென்ன சலுகைகள் அனுபவித்து வருகின்றார்களோ அத்தனை சலுகைகளையும் அங்குள்ள தமிழர்களும் அனுபவிப்பார்கள் என இந்திய மத்திய அமைச்சர் வாசன் தெரிவித்துள்ளார்.

வேலூர் வரவேற்பு விழா நிகழ்வில் கலந்துகொள்ள வந்தபோது நிருபர்களிடம் கூறியதாவது, இலங்கைத்தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு கண்ணியத்துடனும், நிதானத்துடனும் செயற்பட்டு ஐ.நா.சபையில் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. முள்வேலியில் அடைக்கப் பட்டுக் கொண்டிருப்பவர்களை விடுவிக்கும் நேரம் வந்து விட்டது.

' சிங்களவர்கள் என்னென்ன சலுகைகள் அனுபவித்து வருகின்றார்களோ அத்தனை சலுகைகளையும் அங்குள்ள தமிழர்களும் விரைவில் அனுபவிப்பர்.

மத்திய அரசு வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஸ்ணா மற்றும் வெளியுறவு செயலாளர், வெளியுறவுத் தூதரக அதிகாரிகள் மூலம் இலங்கை தமிழர்களின் நலன்கள் குறித்து கவனித்து வருகின்றோம். இலங்கை விடயத் தில் தொடர்ந்து இந்தியா கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. இலங்கை தமிழர்கள் பிரச்சினையை தொடர்ந்து மத்திய அரசு அணுகி வருகின்றது என அவர் கூறினார். (அ-2)

# மதுபோதையில் கூத்தாடிய இளைஞர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதிகளில் பயணித்தோருக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 23 ஆம் திகதி யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் யாழ். நீதிமன்றில் ரூபா 7 ஆயிரம் அபராத மாகச் செலுத்தினர்.

கஸ்தூரியார்வீதி, கொக்குவிலைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவர்களாவர்.

மேலும் இவ்வாறு மதுபோதையில் வீதிகளில் பயணிப்பவர்கள் யாழ். நகரப் பகுதிகளில் அதிகரித்து வருவதனை யாழ்.நீதிமன்றக் குற்றச் செயல் களின் பதிவேடுகளினூடாக அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறானவர்கள் மதுவினை அருந்திவிட்டு வீதியால் பயணிப்போர்களுக்கு இடையூறுகளை விளைவிக்கின்றனர்.

இவ்வாறு மது மயக்கத்தில் கைது செய்யப்படுவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்டவர்கள் இளைஞர்களாகவே காணப்படுகின்றனர் என பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர்களின் அட்டகாசம் பாடசாலைகளின் முன்பாக தொடர்கின்றது. அண்மையில்கூட பெண்கள் பாடசாலை ஒன்றின் முன்பாக மது போதையில் கூத்தாடிய 3 இளைஞர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மனம் தளராதே! மதி மயங்காதே!





நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றலை அடக்கி ஆள கற்றுக்கொள்ளவேண்டும். அதை ஆன்மீக சக்தியாக மாற்றவேண்டும்.

நம்பிக்கையை இழந்துவிடாதே.பாதை, கத்தி முனையில் நடப்பதைப்போல மிகவும் கடினமானதுதான். எனினும் விழித்துக்கொள். மனம் தளராதே! நீ அடையவேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.

மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ உனது சொந்த உறுதியான முடிபில் பிடிப்புடன் இரு. பின்பு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

பிறரை முதலில் நம்புவதைவிட்டு உன்னை நீ முதலில் நம்பு. அனைத்து ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருப்பதால் அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்து. நான் எதையும் சாதிக்கவல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் எதையும் பொருட்படுத்தாமல் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்.



Northern Central Hospital என பெயரிடப்பட்ட நவீன வசதிகளைக்கொண்ட தனியார் வைத்தியசாலையொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வைத்தியசாலையின் ஸ்தாபகரும் தொழிலதிபருமான எஸ்.பி.சாமி உள்ளிட்ட விருந்தினர்கள் நாடாவை வெட்டி திறந்து வைப்பதையும் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஷ் மங்கல விளக்கேற்றுவதையும் சர்வமத தலைவர்கள் ஆசி வழங்குவதையும் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# ஸ்பிரிட்களுடன் இரு லொறிகளை பொலிஸார் கைப்பற்றினர்

போதைப்பொருள் தயாரிக்கும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட சுமார் ஒன்றரை கோடி ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய ஸ்பிரிட்களுடன் இரு லொறிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து இந்த லொறிகள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டதாக மதுவரித் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அத்துடன் குறித்த லொறிகளில் சாரதிகளுடன் பயணித்த போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் சிலரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-7)

# கருணாநிதியின் வெருட்டுக்கு பயந்தே இந்தியா வாக்களித்தது

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

மேற்குலக நாடுகளுக்கு அடிபணியும் பயங்கரவாதத்தை ஆயுதங்கள் மூலம் அழிக்க கூடாது என்ற செய்தியை இலங்கைக்கு எதிராக கடந்த 22 ஆம் திகதி நிறைவேற்றிய யோசனை மூலம் மேற்குலக நாடுகள் உலகில் உள்ள ஏனைய நாடுகளுக்கு வழங்கியுள்ளன என இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மீறப்பட்டதாக கூறி மேற்குலக நாடுகள் இணைந்து இலங்கைக்கு எதிராக யோசனை ஒன்றை கொண்டு வந்தன. மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளில் 23 நாடுகள் இந்த யோசனைக்கு இணங்கவில்லை என்ற விடயத்தை முதலில் கூற வேண்டும். 23 நாடுகளில் 15 நாடுகள் யோசனைக்கு எதிராக வாக்களித்தன. 8 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இலங்கையின் உள்நாட்டில் மனித உரிமை பிரச்சினை இருப்பதன் காரணமாக இந்தியா இந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை. இந்தியாவின் ஆளும் கட்சி பல அரசியல் கட்சிகளை இணைத்தே ஆட்சி நடத்தி வருகிறது. அந்த கட்சிகளில் கருணாநிதி அவர்களின் கட்சி யோசனைக்கு எதிராக வாக்களித்தால் தமது உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருந்து விலகி விடுவார்கள் என இந்திய மத்திய அரசாங்கத்திற்கு அறிவித்தார். இதன் காரணமாகவே இந்தியா யோசனைக்கு ஆதரவாக வாக்களித்தது.

யுத்தத்தின் மிகவும் தீர்க்கமான கட்டத்தில் தமிழகத்தில் 2 மாதங்கள் பாடசாலைகள், சினிமாக்கள் மூடப்பட்டு நடிகர்கள், இயக்குநர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். சட்டத்தரணிகள், நீதிபதிகள் நீதிமன்றத்தை புறக்கணித்தனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் புலிகளை தோற்கடிக்க இந்தியா இலங்கைக்கு உதவியதை மறந்து விடக்கூடாது. இதனால் ஜெனீவா யோசனையுடன் இதனை பின்னிக் கொள்ள கூடாது எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

(அ-7)

# குடாநாட்டில் கேள்விகளுக்கு ரணில் மௌனம் சாதிக்கவில்லை

## ரணில் காரியாலயம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்.நகருக்கு சென்றிருந்த வேளை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் ஐ.தே.கட்சியின் எதிர்காலச் செயற்றிட்டங்கள் குறித்து மக்களுக்கு விளக்கமளித்தார்.

இச்சந்திப்புகளின் போது போர்க் குற்றம் தொடர்பிலோ ஜெனீவா தீர்மானம் குறித்தோ எவரும் கேள்வி எழுப்பவும் இல்லை. அது குறித்து பேசப்படவும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தகவல் தரும் போது, ஐ.தே.க.வினர் யாழில் மேற்கொண்ட மக்கள் சந்திப்பின் போது வடக்கு, கிழக்கு, தெற்கு எனப் பிரித்துப் பார்க்காது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வாழ்க்கை சுமையை தீர்க்க ஐ.தே.க. உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் உரிய முறையில் அமுல்படுத்த வேண்டும்.

இலங்கையில் வாழும் சகல இன மக்களும் ஏற்றுக் கொள்ள கூடிய வகையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இவ்வாறான மூன்று விடயங்களை வலியுறுத்தியே இப்பயணத்தின் போது பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்.நகரில் ஒரு பத்திரிகைக்கு மட்டுமே எதிர்க்கட்சி தலைவர் நேர்காணல் ஒன்றை வழங்கினார்.

அதில் கூட ஜெனீவா குறித்த எந்தவித கேள்வியும் முன் வைக்கப்படவில்லை எனவும் அங்கு பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு மௌனம் சாதித்தார் என்பது தவறான தகவலாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் இராணுவம் சுமுகமாக விசாரணை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தம் தொடர்பில் இராணுவத்தினர் நடத்தி வரும் விசாரணைகள் சுமுகமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது. விசாரணைகள் முடிவுறுத்தப்படும் காலவரையறைகள் பற்றி எதுவும் குறிப்பிட முடியாது என இராணுவ பேச்சாளர் ருவான் வனிக சூரிய தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை நடவடிக்கைகள் நீண்ட பொறிமுறைமைக்குள் உட்படுத்தப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஏனெனில் பல்வேறு தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரையில் மேலதிக தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் இராணுவ நீதிமன்றினால் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவும் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2)

# ஆதார வைத்தியசாலையில் வைத்திய உபகரணங்கள் மோசடி!

## அக்கரைப்பற்றில் சம்பவம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சுகாதார அமைச்சின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளமை குறித்து ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்[illegible]களையும் கொள்வனவு செய்வதற்கென சுகாதார அமைச்சிலிருந்து பணம் பெறப்பட்டுள்ள போதும் கொள்வனவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் மருத்துவ உபகரணங்கள் எவையும் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படவில்லை எனவும் அவை குறித்த பதிவுகள் எவையும் வைத்தியசாலை ஆவணங்களில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, சுகாதார அமைச்சு நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மறைக்கப்பட்டு அவைகளுக்குப் பதிலாக யுனிசெப் அமைப்பிடமிருந்து பெறப்பட்ட மருத்துவ உபகரணங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. (அ-2)

SILVER SHIELD
பாடசாலை மாணவர்களுக்கு
மாபெரும் விலைக் கழிவு
கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)
SILVER SHIELD SOCKS
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள
குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5392

# காலி டெஸ்ட் இன்று ஆரம்பம்; நுழைவுச்சீட்டு தொடர்பாக சர்ச்சை

இன்று ஆரம்பமாகவுள்ள காலி டெஸ்ட் போட்டியின் அனுமதி நுழைவுச் சீட்டுக்களின் விலை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டைச் சேர்ந்த ரசிகர்களுக்காக நுழைவுச்சீட்டுக்கள் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே இந்தக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

7 மாதங்களுக்கு முன் அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அவுஸ்திரேலிய ரசிகர்களுக்கு 500 ரூபாய் கொண்ட நுழைவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்ட நிலையில் இங்கிலாந்து ரசிகர்களுக்கு இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக நிதிப் பிரச்சினைகளில் தடுமாறிவரும் இலங்கை கிரிக்கெட் சபை, இலங்கைக்கு வருகை தர எதிர்பார்க்கப்படும் இங்கிலாந்து ரசிகர்களின் எண்ணிக்கைய்ய கருத்தில் கொண்டு நுழைவுச்சீட்டு விற்பனை மூலம் வரும் அதிக பணத்தை ஈட்டிக்கொள்ள முனைந்துள்ளது.

மைதானங்களின் புற்தரைகளில் இங்கிலாந்து ரசிர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் உள்ளூர் ரசிகர்கள் மாத்திரம் அங்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக இங்கிலாந்து அணியின் உலகப் பிரபலம் வாய்ந்த ரசிகர் அமைப்பான பார்மி ஆமி அமைப்பு தனது திருப்தியின்மையை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தென் மாகாண கிரிக்கெட் அமைப்பின் செயலாளரோடும், இலங்கை கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவரோடும் நடத்திய பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிபடைந்தள்ளதாக அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

பார்மி ஆமியின் எதிர்ப்பை அடுத்து இலங்கை கிரிக்கெட் சபை தற்போது 5 ஆயிரம், ஆயிரம் ரூபாய்கள் பெறுமதியிலான நுழைவுச் சீட்டுக்களை தற்போது அனுமதித்துள்ளது. இந்த இரண்டு நுழைவுச் சீட்டுக்களை எவரும் வாங்கி போட்டிகளுக்கு செல்லலாமென இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் ஒரு நாளுக்கான நுழைவுச்சீட்டாக 90 ஸ்ரேலிங் பவுண்களை இங்கிலாந்து ரசிகர்கள் செலுத்துகின்ற போதிலும் வெளிநாட்டு ரசிகர்களுக்குகென தனியான பணத் தொகை அறவிடப்படுவது குறித்தே இங்கிலாந்து ரசிகர்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

# ஆஸியை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள்

(சென்.லூசியா)

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்கும் இடையிலான நான்காவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.


சென்.லூசியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது.

295 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 42 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக வேகமான சதத்தையும், விக்கெட் ஒன்றையும் கைப்பற்றிய பொலார்ட் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட இத் தொடரில் 4 போட்டிகளின் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# நியூசிலாந்து அணிக்கு 474 ஓட்டங்கள் இலக்கு




தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட முடிபில் 474 ஓட்டங்கள் இலக்குடன் நியூசிலாந்து அணி 65 ஓட்டங்கள் எடுத்துள்ளது. நியூசிலாந்து- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையேயான இரண்டு டெஸ்ட் போட்டிகள் முடிந்துள்ள நிலையில் 3-வது டெஸ்ட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

நியூசிலாந்து வெலிங்டன் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் நாளில் தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் நாள் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டதால் 42 ஓவர் களே வீசப்பட்டன. இதனால் முதல் நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 2 விககெட் இழப்பிற்கு 136 ஓட்டங்கள் எடுத்திருந் தது.

இரண்டாவது நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமையும் மழை காரணமாக காலை நேர ஆட்டம் பாதிக்கப்பட்டது. இதன் பிறகு ஆட்டம் தொடங்கினாலும் போதிய வெளிச்சம் இன்மையால் முன்னதாகவே முடிக்கப்பட்டது. சனிக்கிழமை ஆட்டத்தைப் பொறுத்த வரையில் விக்கெட் எதுவும் விழவில்லை.

மைதானம் ஈரப்பதம் காரணமாக பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்றாலும் தென்னாபிரிக்காவின் அல்விரோ பீட்டர்சனும் டுமினியும் நிதானமாக ஆடி நியூசிலாந்து பந்து வீச்சாளர்களை சோதித்தனர்.

இதனால் ஆட்டநேர முடிபில் தென்னாபிரிக்க அணி 79 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 246 ஓட்டங்களை எடுத்தது. பீட்டர்சன் 96 ஓட்டங்களும் டுமினி 76 ஓட்டங்களும் எடுத்து களத்தில் இருந்தனர்.

இதனையடுத்து மூன்றாம் நாளான நேற்று களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் ஆல்விரோ பீட்டர்சன் 156 ஓட்டங்களுடனும் டுமினி 103 ஓட்டங்களை எடுத்தும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய எபி டி வில்லியர்ஸ் 38 ஓட்டங்களும் ருடோல்ப் 11 ஓட்டங்களும் மார்க் பௌச்சர் 46 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 148.4 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 474ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தது.

நியூசிலாந்து தரப்பில் மார்க் கிலெஸ்பி 113 ஓட்டங்கள் கொடுத்து அதிகபட்சமாக 6 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதனையடுத்து 474 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 25 ஓவரில் 65 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

ஆட்ட நேர முடிபில் தொடக்க வீரர்கள் டேனியல் பிளைன் 35 ஓட்டங்களும் மார்டின் குப்தில் 28 ஓட்டங்களும் எடுத்துள்ளனர்.

# உலகக் கோப்பை இருபது-20இல் விளையாட தகுதிபெற்றது அயர்லாந்து




இவ்வாண்டு இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது - 20 தொடருக்கான (முன்னர் உலகக்கிண்ண இருபது - 20 என அழைக்கப்பட்டது) அணிகளைத் தேர்வு செய்வதற்காக இடம்பெற்ற தகுதிகாண் சுற்றுத் தொடரில் அயர்லாந்து அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இரண்டு அணிகளைத் தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற இத் தொடரில் ஏற்கெனவே தகுதிபெற்ற அணிகளான ஆப்கானிஸ்தான் - அயர்லாந்து அணிகள் நேற்று முன்தினம் மோதின.


டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தொடர்ச்சியான இடைவெளிகளில் விக்கெட்டுக்களை இழந்து வந்த ஆப்கானிஸ்தான் அணி ஒரு கட்டத்தில் 16.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிய போதிலும், இறுதி வரிசை வீரர்கள் ஓரளவு சிறப்பாக ஆடியததன் காரணமாக ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

153 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி அணித்தலைவர் வில்லியம் போர்ட்டபீல்டை முதலாவது பந்திலேயே இழந்த போதிலும், மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான போல் ஸ்ரேர்லிங் சிறப்பாக அதிரடியாக ஆடி அயர்லாந்து அணிக்கு வெற்றியை தேடிக் கொடுத்தார்.

அயர்லாந்து அணி 18.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இப் போட்டியின் முடிபை அடுத்து அயர்லாந்து அணி சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது - 20 தொடரில் அவுஸ்திரேலிய, மேற்கிந்திய தீவுகள் அடங்கிய குழுவில் வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு, ஆப்கானிஸ்தான் அணி, இங்கிலாந்து, இந்திய அணிகள் அடங்கிய குழுவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.



புளோரிடாவில் நடக்கும் மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின், பெண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றில் பெலாரசின் அசரன்கா, வெற்றி பெற்றார். பந்தை அனுப்ப தயாரான அசரன்கா .

# பேருந்து வசதிகளின்றி வன்னி மக்கள் அவதி

வன்னியில் யுத்தம் முடிபடைந்து மூன்று வருடங்கள் நிறைவடைகின்ற போதிலும், வன்னிப்பிரதேசத்தில் பொதுப் போக்குவரத்து சேவைகள் இன்னும் சீராகவில்லை என அரச ஊழியர்களும் பொதுமக்களும் விசனம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தை ஊடறுத்து வடக்கு நோக்கிச்செல்கின்ற ஏ9 நெடுஞ்சாலையில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பு கண்டி உட்பட தென்பகுதி மாவட்டங்களுக்கும் இடையில் பல பேருந்துகள் நீண்ட தூர சேவையில் ஈடுபடுகின்றன.

ஆயினும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரப் பகுதிகளுக்கும் அதே போன்று கிளிநொச்சியில் இருந்து மேற்குக் கரையோர பிரதேசங்களுக்குமான பேருந்து சேவைகள் மிகவும் குறைவாக இருப்பதாகக் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில உள்ள அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் யாழ்.குடாநாட்டைச் சேர்ந்தவர்களே பெரும் எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் தினசரி வீடுகளில் இருந்து வேலைத் தளங்களுக்கு சென்று வருவதற்கு பேருந்து சேவைகளிலேயே தங்கியிருக்கின்றார்கள். எனினும் போக்குவரத்து சேவைகள் சீராக இல்லாத காரணத்தினால் அவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேரிட்டிருப்பதாகப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சியின் பல பகுதிகளுக்கும் வருபவர்களின் துயரங்கள் ஒரு பக்கம் இருக்க, கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்து குறுகிய தொலைவில் உள்ள அந்த மாவட்டத்தின் மேற்கு பிரதேசமாகிய பூநகரிக்கு கடமைக்காகச் செல்பவர்களுக்கு உரிய பேருந்து சேவைகள் நடைபெறவில்லை எனவும் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி பிரதேச போக்குவரத்து நிலைமைகள் குறித்து கருத்து வெளியிட்ட இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதம முகாமையாளர் கணேசபிள்ளை, கிளிநொச்சி போக்குவரத்துச்சாலைக்கு ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட பேருந்துகளே வழங்கப்பட்டதாகவும் ஏனைய வசதிகளும் அந்த சாலைக்கு செய்து கொடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அடிக்கடி பழுதாகின்ற பேருந்துகளை திருத்துவதற்கான உதிரிப்பாகங்களோ, பழுதுபார்க்கும் இடவசதிகளோ இல்லை. இதற்கென அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், அந்த நிதி இன்னும் வந்து சேரவில்லை என்றும் வட பிராந்திய பிரதம முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும் அடுத்த மாதமளவில் வட பகுதிக்கு புதிய பேருந்துகள் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-8,11)

---

## வட-கிழக்...

இலங்கைத் தூதரகம் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் வெளிநாடுகளிலிருந்து சுமார் 20,000 தமிழர்கள் தமது குடும்பத்தினர் உறவினரைச் சந்திப்பதற்காக வடக்கு கிழக்கிற்கு வந்ததாகவும் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 5000 பேர் திரும்பி வந்ததாகவும் கோத்தபாய ராஜபக்ஷ யசூஷி அகாஷியிடம் கூறியுள்ளார். (ந-8,11)

---

## இலங்கையில் தலை...

பிரேரணைக்கு ஆதரவளித்தமையால் இந்தியா எதிர்பார்க்கும் நோக்கங்கள் நிறைவேறும் என குறிப்பிட்ட அவர் அதனூடாக இலங்கை தமிழ் மக்களுக்கு சமனான உரிமைகள், உரிய கௌரவம் மற்றும் நீதி என்பன கிடைக்கும் வாய்ப்புகள் இருப்பதாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் பட்சத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்கு அரசியல் ரீதியான தீர்வுகளை பெற்றுக்கொடுப்பது சிறந்த வழியாகும். ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமையால் இருநாடுகளுக்கும் இடையிலான உறவில் தாக்கம் செலுத்துமா என்பது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இரு நாடுகளும் சிறந்த புரிந்துணர்வுடன் செயற்படுவதாகவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட இலங்கை இந்திய உறவில் இருநாடுகளும் பரஸ்பரம் புரிந்து கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தமது அரசாங்கம் இலங்கைக்கு எதிராக எந்தவிதமான பிழையான தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார். (ந-8,11)

---

## சீன இராஜ...

ஒத்துழைப்பை வலுப்படுத்தல், தேயிலை, இரத்தினக்கல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பிலும் இந்தக் குழு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இந்தப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8,11)

---

## ஜெனிவாத் தீர்மானத்தை...

இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக மக்கள் கருத்தை அறியும் வகையில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும் என சில வட்டாரங்களிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் அது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளையில், நிபுணர் குழுவின் அறிக்கை பெறப்பட்ட பின்னரே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகத் தீர்மானிக்கப்படும் என பிரதமர் டி.எம்.ஜயரட்ண தெரிவித்திருக்கின்றார்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தாமதிக்காமல் நடைமுறைப்படுத்துவதுடன், வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காணத்தக்க வகையில் அரசியல் தீர்வொன்றையும் உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசியல் தலைவர்கள் பலரும் விடுத்திருக்கும் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் முகமாகவே பிரதமர் இந்தக் கருத்தை முன்வைத்திருக்கின்றார்.

அண்மையில் நடைபெற்ற அரசாங்க நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜினோல்ட் குரே, அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால் இந்தக் கறைகளைப்போக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது எனத் தெரிவித்திருந்தார். (ந-8,11)

---

## ஜெனிவாத் தீர்மான...

ஒரு அமெரிக்கர் என்றும், ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரை இங்கு உரையாற்ற விடக்கூடாது என்ற அடிப்படையிலேயே அவரின் உரை இறுதி நேரத்தில் நிறுத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆயினும், இவருக்கான நுழைவு அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டதால் இவர் திட்டமிட்டபடி கொழும்புக்கு வந்து, இருதரப்பு வர்த்தக உறவுகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள நேட்டோவின் தென்பிராந்திய கட்டளைப் பணியகத்தில் அரசியல் ஆலோசகராக முன்னர் பணியாற்றியிருந்த மைக்கல் டிலானி அதன் பின்னர் தென்னாசியாவுக்கான அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரியான இவர், அமெரிக்காவின் வர்த்தகக் கொள்கைகளை உலகளாவிய ரீதியில் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

---

## இலங்கை...

பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அத்துடன் போர் இடம்பெற்ற வன்னிப் பிராந்தியத்துக்கும் நேரில் சென்று போரால் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து போர் மீறல்கள் தொடர்பிலான தகவல்களையும் திரட்டியிருந்தார்.

இந்நிலையிலேயே, இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான் தனது விசாரணை அறிக்கையை அமெரிக்க செனட் சபைக்கு அவர் சமர்ப்பிக்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் போர்க்குற்ற விவகாரங்களுக்கான தூதுவராகப் பணியாற்றும் ஸ்டிபன் ரப், 2007 ஆம் ஆண்டு ஜனவரியில்சியரலியோனுக்கான விசேட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுநராக பணிபுரிந்திருந்தார்.

சியாரா லியோனில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் பெருமளவு கொடூரங்களுக்குப் பொறுப்பானவர் என லைபீரியாவின் முன்னாள் ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் மற்றும் ஏனையவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படுவதற்கு இவரே பொறுப்பாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

---

## ஐ.நாவின் உறுப்பினர்...

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பிலோ அல்லது இலங்கையின் அரசியல் நிலைவரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு விஜயம் செய்யும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளை நாட்டுக்குள் அனுமதிப்பதில்லை என அரசாங்கம் முன்னர் அறிவித்திருந்தது.

இலங்கையின் மனிதவுரிமைகள் நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருடன், ஐ.நா.சபை உயர் அதிகாரிகள் சிலரும் இலங்கைக்கு விஜயம் செய்ய தீர்மானித்திருந்தனர். இந்நிலையிலேயே, அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை அடுத்து அரசாங்கம் இவ்வாறு அறிவித்துள்ளது.

ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை உள்நாட்டுப் பொறிமுறை மூலமாகவே தீர்க்கப்பட வேண்டுமே தவிர, இவ்விடயத்தில் வெளியாரின் உதவிகள் அவசியமில்லை என்பதே எமது நிலைப்பாடு என அரசாங்கம் கூறியிருந்த நிலையில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயத்துக்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியிருக்கின்ற போதிலும், அவரது விஜயத்துக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதா என்பதையிட்டு அரசாங்கம் இதுவரையில் தீர்மானிக்கவில்லை என அரசாங்கத்தின் பதில் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்திருந்தார்.

ஐ.நா. தூதுக்குழு நாட்டுக்கு வரும்போது தான் இது தொடர்பில் ஒரு தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (ந-8,11)


## அலுவலர் தேவை

MyWay நிறுவனத்தின் நெல்லியடி, யாழ்ப்பாணம், மற்றும் அச்சுவேலி கிளைகளில் பணிபுரிய A/L படித்தோர் இன்று அல்லது நாளை சுயவிபரகோவையுடன் நேரில்வரவும். நல்ல கையெழுத்து மற்றும் கணினி அறிவு விரும்பத்தக்கது.

(பட்டதாரிகள் வேண்டாம்)

MyWay
182, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
077 33 63 456



## விற்பனையாகின்றது

வேதநாயகம் தபேந்திரன் எழுதிய நூல்கள்

- யாழ்ப்பாண வாழ்வியல் பெருமைகள் கூறும் கட்டுரைகள்.
  "பூத்திடும் பனந்தோப்பு" (300/=)
- அனைத்துப்போட்டிப் பரீட்சைகளுக்கான
  "புதிய பொது அறிவு - 2012" (350/=)
- தரம் 4 முதல் 7 வரையான மாணவர்களுக்கான
  "சிறுவர் பொது அறிவு - 2012" (200/=)

கிடைக்கும் இடங்கள்
யாழ்: சிறிலங்கா, பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகள், Book Lab - பரமேஸ்வரா சந்தி
நெல்லியடி: சிதம்பரப்பிள்ளை
சுன்னாகம்: துர்க்கா.
(C-6158)



## சுய தொழில் ஆர்வம் உள்ளவர்களுக்கு விளம்பரத்துறையில் உடனடி வேலை வாய்ப்பு பயிற்சிப்பட்டறை

உள்ளடக்கம்:-
- வாடிக்கையாளர் நலம் பேணுதல் (Customer Care Relationship)
- அலுவலக நடைமுறைக்கோட்பாடு (Office Ethics)
- அடிப்படை வியாபார ஆங்கிலம் (Basic English For Business)
- விளம்பரத்துக்கான தொடர்பாடல் (Marketing Communications)

எமது குழும நிறுவனங்களின் சேவையை விரிவுபடுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்படும் இத் தெரிவில்.......

பருத்தித்துறை,நெல்லியடி,யாழ்ப்பாணம்,சாவகச்சேரி, சுன்னாகம்,மானிப்பாய்,சங்கானை,தீவுப்பகுதி, கிளிநொச்சி,மன்னார்,திருகோணமலை,வவுனியா

போன்ற இடங்களிலிருந்து விண்ணப்பிப்போருக்கு பயிற்சியின் இறுதியில் இடம் பெறும் வேலை வாய்ப்புக்கான தெரிவின் போது பிரதேச அடிப்படையில் தலா 2 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

அடிப்படை தகுதிகள்
- தன்னம்பிக்கை
- விடாமுயற்சி
- கடின உழைப்பு
- நிதானம்
- வேலையில் ஈடுபாடு
- உரையாடல் திறன்




கட்டணம் 4000/= மட்டுமே

எதிர்பார்க்கப்படும் கல்வித் தகுதிகள்
*O/L PASS* (ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

வேலை வாய்ப்பு பயிற்சி பட்டறை
இடம் :- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் அருகில்,
காலம் :- 07-04-2012 தொடக்கம் 21-04-2012 வரை
செயன்முறையுடன் கூடிய 50 மணித்தியாலங்கள்.

சுய விபரக் கோவைகள்(cv)30.03.2012 க்கு முன்னதாக.....
V4 EDUCATIONAL CONSULTANCY
23,MODERN MARKET
VALVETTITHURAI, JAFFNA.
என்னும் முகவரிக்கு அல்லது mail@v4edu.com என்னும் E-mail முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
மேலும் தொடர்புகளுக்கு:-0774836084
(8016)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.